Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (8 6-66) இதழ் 121

பராபவ வைகாசி 26 ஸபர் 18 புதன்கிழமை

## இந்திய ரூபாய்: புதிய மதிப்பும் அந்நிய செலாவணியும்

புதுடில்லி, ஜூன் 7

இந்திய ரூபாயின் மதிப்பு குறைக்கப்பட்டதை அடுத்து முக்கிய அந்நிய செலாவணியின் பெறுமதி கீழ் வருமாறு;

ஒரு அமெரிக்க டாலரின் மதிப்பு ரூ 7. சதம் 5. பிரிட்டிஷ் ஒரு ஸ்டர்லிங்கின் மதிப்பு ரூ. 21 ஒரு ரஷ்ய ரூபாவின் மதிப்பு ரூ 8.33.

ரூபாவின் மதிப்பு குறைக்கப்படுவதற்குமுன், ஒரு டாலர் ரூ. 4.76 ஆகவும், ஒரு ஸ்டர்லிங் ரூ. 13.33 ஆகவும், ஒரு ரூபிள் ரூபா 5.21 ஆகவும் இருந்தது

சில காலத்திற்குமுன் பிரான்ஸ் யூகோஸ்லேவியா ஆகிய நாடுகள் தங்கள் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கும் பொருட்டு அவற்றின் நாணய மதிப்பைக் குறைத்தன. புதிய நிலைமையை வெற்றிகரமாக சமாளித்துவருகின்றன

ரூபாய் மதிப்பை இந்தியா, எவருடைய நிர்ப்பந்தம் காரணமாகவும் குறைக்கவில்லை ஏற்கனவே இதுபற்றி அரசாங்கம் ஆலோசித்து வந்தது. உலக வங்கியும் அதற்கேற்ப ஆலோசனை கூறியது. சர்வதேச உபகார நிதி ஸ்தாபனத்திற்கு அறிவித்த சிறிது நேரத்தில் திடீரென இந்தியா ரூபாய் மதிப்பைக் குறைத்துவிட்டது.

# இலங்கை ரூபாயின் மதிப்பு குறையாது

## நிதிமந்திரி அறிவிப்பு

கொழும்பு, புதன்


**இந்திய ரூபாயின் மதிப்பில் முப்பத்தி ஆறரை சதம் குறைக்கப்பட்டிருந்தாலும் இலங்கை அதன் ரூபாய் மதிப்பைக் குறைக்காது என நிதிமந்திரி திரு. யு. பி. வன்னிநாயகா கூறினர்.**

இலங்கையின் வெளிநாட்டு செலாவணி பற்றி கலந்து பரிசீலனை செய்யப்பட்டது என்றும் இதன் விளைவாக ரூபாயின் மதிப்பை குறைப்பதில்லை என முடிவுசெய்யப்பட்டதாயும் திரு. வன்னிநாயகா கூறினர்.

வழமைபோல் அமெரிக்க டாலர் இலங்கை செலாவணிப்படி ரூபா 4.76 ஆகவும், பிரிட்டிஷ் ஸ்டார்லின் பவுண் ரூபா 13.33 ஆகவும் இருக்கும்.

இலங்கையின் இம்முடிவு உள்நாட்டின் பல வட்டாரங்களினால் வரவேற்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் வர்த்தகம் இப்போது சுறுசுறுப்பு அடைந்திருப்பதாய்க் கூறப்படுகிறது. தாழ்ந்த பிரதேச உற்பத்திச் சங்கத் தலைவர் அரசாங்கத்தின் முடிவைவரவேற்றிருக்கிறார்.



யாழ்ப்பாண ஜவுளிக்கடையில்

## 90 சேலைகள் கைப்பற்றப்பட்டன!

### வர்த்தக அதிகாரியின் உத்தரவு எதிர்பார்க்சப்படுகிறது

யாழ்ப்பாணம், புதன்

**நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில்உள்ள பிரபல ஜவுளிக் கடையொன்றில்விலையுயர்ந்த 90 சேலைகள் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது. இவற்றை விலைக்கட்டுப் பாட்டதிகாரிகள் கைப்பற்றினர்.**

ஜவுளிக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஜவுளி வர்த்தகர்கள் இம்மாதம் 14-ந் திகதிக்குமுன்னர் தங்கள் இருப்புநிலைமையை வர்த்தகப்பகுதி அதிகாரிக்குத் தெரிவிக்கவேண்டும் எனக் கேட்கப்பட்டிருந்தனர் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஜவுளி விற்பனையாளர்கள் எவரும் இதுவரை தங்கள் இருப்பு நிலைமையை குறிப்பிட்ட அதிகார்களுக்கு அறிவிக்கவில்லையென உதவி உதவி உணவு கட்டுப்பாட்டு அதிகாரி அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல ஜவுளிக்கடையொன்றில் நேற்று விலைக்கட்டுப்பாட்டு பகுதியினர் சென்று 90 விலை உயர்ந்த சேலைகளை எடுத்துச்சென்றனர். கைப்பற்றப்பட்ட சேலைகள் விலை உயர்ந்த ரகத்தை சேர்ந்தவையென்றும் இவைவிலைக் கட்டுப்பாட்டு திட்டத்தின் கீழ் வரவில்லையென்றும் குறிப்பிட்டவர்த்தகர் கூறியதைத் தொடர்ந்தே இச் சேலைகள் விலைக்கட்டுப் பாட்டுப்பகுதியினரால் எடுத்துச்செல்லப்பட்டன.

இதுசம்பந்தமாக வர்த்தக அதிகாரியின் உத்தரவை யாழ். விலைக்கட்டுப்பாட்டு [illegible]

அவதூறு வழக்கு

## எம். பி. மீது தாக்கலாகும்

கொழும்பு, செவ்.

ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை அவதூறு செய்ததாக மகார எம். பி. திரு. எஸ். கே. சூரியாராச்சிக்கு எதிராக அட்டோர்ணி ஜெனரல் இலாகா குற்றப்பத்திரிகை தயாரித்துள்ளது.

இன்னும் சில தினங்களுக்குள் இவர்மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவிருக்கிறது

கூட்டரசாங்கக் கட்சிகளின் மேதினக் கூட்டத்தில் திரு. சூரியாராச்சி பேசுகையில் ராஜாங்க மந்திரியை அவதூறாகப் பேசுவதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது

## திரு. ஜெயவீராவுக்கு பதவி உயர்வு

திருமலை, செவ்

தற்போது திருகோணமலை அரசாங்க அதிபராகக் கடமையாற்றும் திரு. நெவில் டி ஜயவீரா இம்மாதம் 15-ம் திகதியுடன் இராஜாங்க அமைச்சின் சிரேஷ்ட உதவிக் காரியதரிசியாகப் பதவியுயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

திருமலையில் புதிய அரசாங்க அதிபராக திரு விக்ரமரத்ன நியமிக்கப்படவிருக்கின்றார் எனத் தெரிகின்றது.

## காருக்குள் 3 சடலங்கள்!

குளியாபிட்டியா, செவ்வாய்

காரொன்றுக்குள் மூன்று சடலங்கள் இருக்கப் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர். ஆண், பெண். குழந்தை ஆகிய இந்த மூன்று சடலங்களும் ஹெட்டியபொல சிலாபம் வீதியில் புதுகாகரக என்னுமிடத்தில் சிலாபத்தை நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு காருக்குள் மிகவும் பரிதாபகரமான நிலையில் கிடக்கக் காணப்பட்டன. இறந்துகிடந்த ஆண், பெண், குழந்தை ஆகிய இந்த மூவரின் வயது முறையே 35, 28, 1 1/2 இந்த காரின் இலக்கம் ஈ வை 6360

இதுசம்பந்தமாக ஹெட்டியபொல பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர்

## ரூபாய் மதிப்பு குறைப்பும்; பின்னணியும், எதிரொலியும்

புதுடில்லி, ஜூ 7

**இந்திய ரூபாயின் மதிப்புக் குறைக்கப்படவேண்டுமென உலக வங்கி சிபார்சு செய்த போதிலும், இந்திய அரசாங்கம் சில காலமாக அதை எதிர்த்துவந்தது**

1949-ம் ஆண்டும் பவுண் ஸ்டர்லிங்கின் மதிப்புக் குறைக்கப்பட்டபோது, ரூபாயின் மதிப்பும் குறைக்கப்பட்டது. ரூபாய் மதிப்புக் குறைக்கப்பட்டதை அடுத்து 72 ஏற்றுமதிப் பொருட்களுக்கு புதிய ஏற்றுமதி வரிகள் விதிக்கப்பட்டன.

சர்வதேச உலக நிதிஸ்தாபனத்தின் அங்க நாடுகளான பாகிஸ்தானும் இலங்கையும் அதன் ரூபாய் மதிப்பில் மாற்றம் செய்வது அந்த நாடுகளின் விருப்பத்தைப் பொறுத்ததுஎன்றும், இந்தியாவுக்காக அவை எதுவும் முடிவு செய்வதைத் தாங்கள் விரும்பவில்லை என்றும் நிதி இலாகா அதிகாரி ஒருவர் கூறினர்

### டெய்லி டெலிகிருப்

ஸ்ரீமதி இந்திரா காந்தியும் அவரது ஆலோசகர்களும் முன்பே இத்தகைய நடவடிக்கையை எடுத்திருந்தால், மக்களின் கஷ்டங்களைக் குறைத்திருக்கலாமென பிரிட்டிஷ் 'டெயிலி டெலிகிருப் பத்திரிகை தன் ஆசிரியர் தலையங்கத்தில் கூறியிருக்கிறது.

ஒரு வருட பொருளாதார கஷ்டம், வெளிநாட்டுச் செலாவணி கஷ்டம் ஆகியவற்றுக்குப் பின்பே புதிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்றும் அது கூறியுள்ளது.

'கடந்த ஆண்டு பருவநிலை கோளாறைத் தொடர்ந்து, பாகிஸ்தானுக்கு எதிரான யுத்தம் ஏற்பட்டது. வெளிநாட்டு உதவியைப் பாதித்தது.

### சவால் ஏற்பட்டது

பல காலமாக ரூபாய் மதிப்புக் குறைக்கப்படும் என வதந்தி உலாவியபோதிலும் அரசாங்கம் பலமுறை இதை மறுத்துள்ளது 1947ம்ஆண்டுசுதந்திரத்திற்குப்பின் கடந்த மே மாதம் வெளிநாட்டுச் செலாவணி கையிருப்பு இந்தியாவுக்குப் பெரும் சவாலை ஏற்படுத்தியது' என்றும் அப்பத்திரிகை கூறியது

இந்தியாவின் அந்நியச் செலாவணிகையிருப்பு புதிய நடவடிக்கை மூலம் பலப்படுமென நிதிமந்திரி சசிந்திர சவுத்திரி கூறினர்.

தேயிலை, கோப்பி, சணல் பருத்தி, கம்பளம், புகையிலை உட்பட ப்பல பொருட்களுக்கு ஏற்றுமதிக் கட்டுப்பாட்டை இந்தியா உயர்த்திருப்பதாயும அவர் கூறினார். இப்பொருட்களுக்கு உலக மார்க்கெட்டில் கிராக்கியிருப்பதாயும் அவர் கூறினர்

### பட்ஜட் பாதிக்காது

ரூபாய் மதிப்புக் குறைக்கப்பட்டதினல் 1966/67-ம் ஆண்டு பட்ஜட் பாரதூரமாகப்பாதிக்கப்படாது என

(8-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை வர்த்தகர்களுக்கு தீங்கு விளைவிக்கோம்

### உதவி நிதிமந்திரி வாக்குறுதி

காலி, செவ்வாய்

இலங்கை வர்த்தகர்களுக்கு தேசிய அரசாங்கம் ஒருவிதமான தீங்கும் விளைவிக்காது. நாங்கள் வெளிநாட்டு முதலாளிகளுக்கெதிராகவே எங்கள் போரை ஆரம்பித்துள்ளோம். என்று நிதி அமைச்சின் உதவிப் பாராளுமன்றக் காரியதரிசி காலியில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் பேசும் பொழுது குறிப்பிட்டார்.

திரு. எஸ். பி. பெரேரா ண்டோ சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டதற்கு வரவேற்பு அளிக்குமுகமாக நடாத்தப்பட்ட பொதுக் கூட்டத்திற்கு உள்நாட்டு மந்திரி திரு. டப்ளியு. தஹநாயகா தலைமை வகித்தார்.

திரு விமலசேன பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

இலங்கை வர்த்தகம் பிற நாட்டார்கையிலேயே இருக்கின்றது இவர்கள் நாட்டைச் சூறையாடிவிட்டனர் தேசிய அரசாங்கத்தின்நோக்கம் இலங்கைவர்த்தகர்களை ஊக்குவித்து அவர்களுக்கு உதவி அளிப்பதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

பெண் உத்தியோகஸ்தர்

பெண் குமாஸ்தாக்களும் பெண் தட்டெழுத்தாளர்களும் நெசவு ஆசிரியையும், நெசவு தெரிந்த பெண்களும் தேவை. விண்ணப்பிக்கவும். பெனின்சுலா இண்டஸ்றீஸ், 481, மெயின் வீதி, சாவகச்சேரி. 530

### காணவில்லை

கூப்பன்கள்

சி. துரையப்பா இல. M 786506, து. லெட்சுமி அம்மா இல, 786507 து. செந்திவேல் இல M.786508 விசாகபதி இல. 786509, து.விஜயராணி இல.786510 மேற்படி 5 கூப்பன்கள் 3-6-66 இல் கூ. மொ வி. ஸ்தாபனத்திற்கு அண்மையில் தவறிவிட்டன. கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் சேர்ப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். 534

## வல்லையில் கூட்டுறவு வைத்தியசாலை

வல்வெட்டித்துறை, செவ்: வல்லைவெளியில் பூர்த்தியடைந்துவரும் வடமராட்சி கூட்டுறவு வைத்தியசாலைக் கட்டிடத்தை எதிர்வரும் ஆவணி மாதத்தில் திறந்து வைப்பதென கூட்டுறவுச் சங்க நிர்வாகசபைக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

## சிரமதான மூலம் வாய்க்கால் செப்பனிடப்பட்டது

யாழ்ப்பாணம். புதன் கிளிநொச்சிக் குடியேற்ற வாசிகளால் குடியேற்ற அதிபர் திரு. செல்வராசா தலைமையில் ஒரு மைல் நீளம் வரை வாய்க்கால் சிரமதான மூலம் செப்பனிடப்பட்டது. குடியேற்ற மக்கள் அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்க்காமல் சிரமதான மூலம் தாங்களே செய்ய முன்வந்துள்ளமையும் இச்சந்தர்ப்பத்தில் தான் பங்கு கொள்வதில் பெருமையடைவதாகவும் குடியேற்ற அதிபர் பேசும்போது குறிப்பிட்டார். சிரமதான இயக்கத்தால் 150 விவசாயிகள் பயனடைவர்.

## கும்பாபிஷேகம்

காரைநகர், புதன் காரைகர் கருங்காலி—போகிட்டி முருகமூர்த்தி கோவில் புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் இன்று நடைபெறும்.


## திருஞானசம்பந்தர் குருபூசை

உடுப்பிட்டி, செவ். வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் வித்தியாசாலையில் இந்து மாணவர் மன்றச்சார்பில் ஆசிரியர்களும், மாணவர்களும் திருஞானசம்பந்தர் குருபூசையைக்கொண்டாடினர். மாணவர்கள் சிலர் ஞானசம்பந்தர் பற்றி சொற்பொழிவாற்றினார்கள்


ஒரு பிரபலமான டுப்பிளிகேட்டறின் பிரபலமான மொடல் சகாயமானவிலைக்கு உண்டு

M2

REX-ROTARY



எம்2 — விசேஷ அம்சங்கள்

காகிதங்கள் வைக்கும் பெட்டியில் 250 காகிதங்கள் வைக்கலாம், தபால் அட்டையிலிருந்து முழு அளவுக் காகிதம் வரையான எந்த அளவுள்ள காகிதத்திலும் பிரதிகள் எடுக்கலாம்.

உயரம், ஓரம் ஆகிய நிர்ணயங்களை இலகுவில் செய்யலாம். விரும்பிய விதத்தில் ஒழுங்கு செய்யக்கூடியது. ஸ்டென்சில் வெட்டுகள் செய்யக் கூடிய வகையில் சரி செய்யலாம்.

கௌண்டரில் நான்கு இலக்கங்கள் உண்டு. விரும்பினால், ஒற்றைக் கணக்கை மாற்றி சைபர் ஆக்கக்கூடிய வசதியும் செய்யப்பட்டுள்ளது. இது எடுக்கும் பிரதிகளின் எண்ணிக்கையைச் சரியாகக்கணக்கிடுகிறது. இயந்திரம் இயங்காதிருக்கும்போது கிராங்கின் சுழற்சிமுறை மாற்றுப் போறி சுழற்சி எண்ணிக்கைகளை இது கணக்கிடுவதில்லை.

இத்தகைய சிறப்பு வாய்ந்த அம்சங்களுடன் கூடிய எம்—2 இன் விலை குறைவானதே. பாவிக்கும்போதும் அதிக செலவு ஏற்படுவதில்லை. இதனால்தான் எம்—2 இன் விலைக்கு அது விரைவில் நல்ல சேவையை
தரும்.

எம்—2 ஆற்றிய இன்னும் அதிகம் கூறலாம். உங்களுக்குக் கஷ்டமின்றி எவ்வளவுதூரம் அது சேவை செய்யும் என்பதை நீங்கள் அறிய வேண்டும். தொலைபேசி மூலம் அல்லது கடிதம் மூலம் எம்முடன் தொடர்புகொண்டால், எம்—2 வேலை செய்யும் விதத்தை உங்களுக்கு உங்கள் காரியாலயத்திலேயே காண்பிப்பதில் மகிழ்ச்சியடைவோம்.

விரைவில் இறக்குமதி செய்யப்படவிருக்கிறது.

ஆபீஸ் இக்கியுப்மெண்ட் லிமிட்டெட்
(OFFICE EQUIPMENT LTD.)

ஜல்லண்ட் கட்டிடம், கொழும்பு—3.
தொலைபேசி: 6168
தந்தி: ஆபீஸ் ...


# விளம்பரம்

## வேலை வாய்ப்பு

பொலிஸ் உத்தியோகத்திற்கான விண்ணப்பப்பத்திரங்கள் எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**வர்த்தக கலாசாலை**
230, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். [476

## காங்கேசன்துறை பட்டினசபை
## கேள்விப்பத்திர அறிவித்தல்

பின்வரும் உபகரணங்களை வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்16ந் திகதி காலை 10 மணிவரையும் பட்டினசபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதிகள்சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

விபரம்:

(1) டீசல் எண்ணெயிலோ அன்றி மண்ணெண்ணெயிலோ இயங்கும் உழவு யந்திரம்.

(2) 6 தொன் எடையுள்ள 'சாசிஸிஸ்' இணைக்கப்பட்ட ஒரு 'ட்ரெயிலர்'.

(3) சக்கரங்களில் பூட்டப்பட்டதும் 1000 கலன் கொள்ளக்கூடியதுமான தண்ணீர் 'பவுசர்'.

(4) உழவு யந்திரத்தில் இணைக்கப்படுவதற்கான விவசாய உபகரணங்கள்.

கேள்விப்பத்திரப் பணமாக 25 ரூபாவும், கட்டுப்பணமாக 250 ரூபாவும் செலுத்தி கேள்விப்பத்திரப் படிவங்கள் பட்டினசபைக் கந்தோரில் 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7-ம் திகதி நண்பகல் 12 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரப் பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது.

கேள்விப்பத்திரங்கள் பதிவுத்தபால் மூலம் தலைவர், காங்கேசன்துறை பட்டினசபை, என்றவிலாசத்துக்கு அனுப்பப்படவேண்டும். அன்றேல் சபைக் கந்தோரில் உள்ளகேள்விப்பத்திரப் பெட்டியில் சேர்ப்பிக்கப்படவேண்டும்.

மேலதிக விபரங்களை கந்தோர் நேரங்களில் பட்டின சபைக் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம். கேள்விப்பத்திரதாரர்கள் உழவு இயந்திரம், ட்ரெயிலர் 'பவுசர்' விவசாய உபகரணங்கள் ஆகியவற்றின் பொறியியல் விபரங்கள், மாதிரிப் படங்கள், அவை இயங்கும் விதம், அவற்றை உபயோகிப்பதற்கு ஏற்படும் செலவினங்கள் ஆகிய விபரங்களையும் கேள்விப் பத்திரத்துடன் இணைக்க வேண்டும்.

ஏ, வி. சதாசிவம்,
தலைவர்

காங்கேசன்துறைப் பட்டினசபை. 479


**WANTED**

**Manager**

Electrical and Machinery Department only persons with thorough knowledge of Electrical and Mechanical appliances and over five years experience in Salesmanship with a recognised Engineering firm and able to handle correspondence indepently need apply. Salary all inclusive Rs. 350/00. Please apply before 15-6-66 to Messrs Autos Limited, Jaffna.


## திருக்கோணமலை நகராண்மைக் கழகம்
## அசைவுள்ள பொருட்களின் விற்பனை

மாநகரசபைகள் சட்ட 252 (1)ம் பிரிவின் (அத்தி 252) படியும், நகரசபைகள் சட்ட 170 (1)ம் பிரிவின் (அத்தி 255) படியும், திருக்கோணமலை நகராண்மைக் கழகத் தலைவரால் பிறப்பிக்கப்பட்ட விருந்தின் பிரகாரம் கீழ்க் குறிப்பிட்ட இடங்களுக்கு சோலைவரி நிலுவைகளைச் செலுத்தத் தவறியதற்காக சுவீகரிக்கப்பட்ட பின்வரும் பொருட்கள் திருக்கோணமலை நகராண்மைக் கழக மண்டபத்தில் 1966-ம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு முன் உரிய நிலுவைகளைச் செலுத்தாவிடில் அப்பொருட்கள் ஏலத்தில் விற்கப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எஸ். சிவானந்தன்,
தலைவர்
நகராண்மைக்கழகம்,
திருக்கோணமலை.

நகராண்மைக்கழக அலுவலகம்,
திருக்கோணமலை. 5-6-66.

| வளவு இல | வீதி/தெருவின் பெயர் | பொருள் விபரம் | தொகை |
|---|---|---|---|
| 90,91/1, 90/2 94, 96. | கச்சேரி வீதி | ரீப்போய் சாய்வு | 2 |
| | | நாற்காலிகள் | 2 |
| | | சாதாரண கதிரைகள் | 2 |
| 17 | புதிய சோனக தெரு | கதவு | 1 |
| 274,276,278, 284,288,290, 292,294,296, 298. | பள்ளிவாசல் வீதி | ஐஸ்பெட்டிகள் | 21 |
| | நீதிமன்றவீதி | ரீப்போய் | 1 |
| | | சாக்குகட்டில் | 1 |
| 330/4 | | மேசை | 1 |
| | | கண்ணுடிப்பெட்டி (பழையது) | 1 |
| | | கதிரை | 1 |
| 24/1 | எபோனி ஒழுங்கை | பெரிய மேசைகள் | 2 |
| 137,139, 139/1,141, 143. | மத்தியவீதி | மூடியுடன் உள்ள உஷா தையல் (கை) இயந்திரம் | |

481

## வேலணைக் கிராமசபைக் கேள்வி அறிவித்தல்

**அரசாங்க நன்கொடை வேலை**

வேலை விபரம்

''கோவில் வீதி'' வட்டாரம் (7)

வேலணைக் கிராம சபை அக்கிராசனரால் மேற்குறிப்பிட்ட வேலைகள் செய்வதற்குக் கேள்விப் பத்திரங்கள் 1966-ம் ஆண்டு ஆனிமாதம் 20-ம் திகதி திங்கட்கிழமை காலை 9-30 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 19-6-66 மாலை 2-00 மணி வரையும் கேள்விப் பணம் ரூபா 50/- ம், பத்திரப் பணம் ரூபா 3/-ம் கட்டிய தன்பேரில் உத்தியோகபூர்வமான பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்களுக்கு வழங்கப்படும்.

ஏனைய விபரங்கள் கிராம சபைக் காரியாலயத்திலும், வடபகுதி உள்ளூராட்சி உதவி அதிபர் அவர்களின் காரியாலயத்திலும் அறிந்து கொள்ளலாம்.

பு. சுப்பிரமணியம்.
தலைவர்,
கிராம சபை, வேலணை.
477

## ஊர்காவற்றுறை பட்டின சபை
## கேள்வி விளம்பரம்

1966-ம் ஆண்டு ஆனி மாதம் 15-ம் திகதி மாலை 3-00 மணி வரை பட்டின சபைத் தலைவரால் சண்முகநாதன் வீதி பெருந் திருத்த வேலைக்கு பதிவு செய்த ஒப்பந்தக் காரர்களிடமிருந்து முத்திரை (சீல்) வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் மற்றும் விபரங்கள் பட்டினசபைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வே. சிவசம்பு.
தலைவர்,
ஊர்காவற்றுறைப் பட்டினசபை.
28-5-66. 480

## நாவற்குழி கிராம சபை
## கேள்வி விளம்பரம்

1966-ம் ஆண்டு ஆனிமாதம் 18-ந் திகதி நண்பகல் 12 மணிவரை நாவற்குழி கிராம சபை அக்கிராசனரால் கைதடி நடுக்குறிச்சி கொத்தாக்குடை ஒழுங்கை திருத்தவேலைக்கு சீல்வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் பதிவுத் தபாலில் கிராம சபை அக்கிராசனருக்கு அனுப்பப்படவேண்டும். கேள்வியைக் கொண்ட காகித உறையின் இடது பக்க மேல்மூலையில் இன்ன வேலைக்கான கேள்வி என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும். கேள்வியின் நகல் பிரதியொன்று வடபிரதேச உள்ளூராட்சி உதவி அதிபருக்கு அதே நேரத்தில் அனுப்பப்படுதல்வேண்டும்.

ரூபா 100/- கட்டுக்காசு கட்டியதன் பேரில் கிராம சபை அக்கிராசனரால் 16-6-66 நண்பகல் 12 மணி வரை வழங்கப்படும் உத்தியோக பூர்வமான பத்திரங்களில் கேள்விகள் தயாரிக்கப்படுதல்வேண்டும். கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 5/- கட்டவேண்டும். இப்பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. கேள்விப் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

மேலதிகமான விபரங்கள் எதுவும் நாவற்குழி கிராம சபை அலுவலகத்திலாவது அல்லது வடபிரதேச உள்ளூராட்சி உதவி அதிபரிடமிருந்தாவது அறிந்துகொள்ளலாம்.

க. தம்பிப்பிள்ளை,
அக்கிராசனர்,
கிராம சபை, நாவற்குழி,

கிராம சபை அலுவலகம்,
நாவற்குழி, கைதடி
6-6-66. 483

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கம்யூனிஸ்ட் சீனுவுக்கு முதலாளித்துவ ஆபத்தாம்

# சீனுவில் தலைதூக்கிவரும் அரசியல் பதற்றம்!

## பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள் வெளியேற்றம்

### 'பீபிள்ஸ் டெய்லி' உட்பட பல பத்திரிகாசிரியர்களும் விலக்கம்

பீகிங், ஜூன் 7

பீகிங் பல்கலைக் கழக ஆசிரியர்கள், மாணவர்களிடையே அரசியல் காரணத்தால் பெருமளவு வெளியேற்றம் நடைபெறுவதாகவும், பல்கலைக் கழகப் பகுதியில் வெளிநாட்டு நிருபர்கள் தடைசெய்யப்பட்டிருப்பதாயும் கடைசியாகக் கிடைந்த செய்திகள் கூறுகின்றன.

பல்கலைக் கழகத்தில் அரசியல் மனு கல்வி இயக்கம் தீவிரமாக இடம்பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. பல்கலைக் கழக தலைவர் லூபிங், உபதலைவர் (பெண்) பென்பீ ஆகியோர் அகற்றப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் மீது விசாரணை நடத்தப்படும் எனத்தெரிகிறது.

பீகிங் 'பீபிள்ஸ் டெய்லி" உட்பட மூன்று பத்திரிகைகளின் ஆசிரியர் குழாங்களிலிருந்தும் பலர் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். பல்கலைக் கழகத்தில் மறு கல்வி இயக்கத்துக்கு இவர்களில் சிலர் உதவிபுரிந்தனராம்.

இதுவரை வெளியேற்றப் பட்டவர்களில் பென்பீ, உயர்பதவி வகிக்கும் முதல் பெண்மணியாகும்,

அரசியல் பதற்றம் ஏற்பட்டிருக்கிறதென்பதை ஒரு மணி நேரம் நேற்று நீடித்த பீகிங் வானொலி ஒலிபரப்பு ஊர்ஜிதம்செய்வதாய் இருந்தது.

பூஷ்வாக்கள் இன்றும் இருக்கிறார்கள் என்றும், சீனுவுக்குள்ளேயே அவர்கள் சதியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும் அது கூறியது. பூஷ்வாக்கள் வெற்றி பெற்றால் சீனுவுக்குள் முதலாளித்துவத்தைக் கூட அவர்கள் கொண்டுவந்து விடுவார்கள் என்றும், மக்கள் கவனமாய் இருக்கவேண்டும் என்றும் அதுமேலும் எச்சரித்தது.

## இந்தோ-பாக் நில அதிர்ச்சி

புதுடில்லி. ஜூன் 7

வட பாரதத்திலும், பாகிஸ்தானிலும் நேற்று பிற்பகல் பல இடங்களில் நில அதிர்ச்சி ஏற்பட்டது. ஸ்ரீநகரில் விட்டுவிட்டு பல தடவை அதிர்ச்சி கண்டது. பாகிஸ்தானிலுள்ள பெஷாவரில் பல வீடுகள் சேதமுற்றன. ஒரு குழந்தை காயமுற்றது. ஒருவர் மரணமானார்.

## துருக்கியில் ஒரு நேரு

அங்காரா, ஜூன் 7

துருக்கியிலுள்ள தொலைதூர கிராமம் ஒன்றில், ஒருவர் தன் மகனுக்கு நேரு எனப் பெயரிட்டிருக்கிறார். நேரு துருக்கிக்கு விஜயம் செய்தபோது இப் பையன் பிறந்தவனும்.

ஜன சங்கம்

## 300 பார்லிமெண்ட், 1800 சட்டசபை தொகுதிக்கு போட்டி

போபால், ஜூன் 7

பாரதீய ஜனசங்கம் வரும் பொதுத் தேர்தலில் 300 பார்லிமெண்ட் ஸ்தானங்களுக்கும், 1800 சட்ட சபை ஸ்தானங்களுக்கும் போட்டியிடும் என அக்கட்சி பொதுக் காரியதரிசி கூறினார்.

உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், உத்தேச பஞ்சாபிசுபா, ஹரியானு ராஜ்யங்களில் தனது கட்சி எல்லா பார்லிமெண்ட் தொகுதிகளிலும் அசெம்பிளி தொகுதிகளிலும் போட்டியிடும் என அவர் தெரிவித்தார்.

ராஜஸ்தானில் 125 சட்ட சபை ஸ்தானங்களுக்கு ஜன சங்கம் போட்டியிடும் என்றார் அவர்.

கட்சியின் மத்திய பார்லிமெண்டரி போர்டு ஜூலை 9, 10, 11-ம் திகதிகளில் சென்னையில் கூடும்போது அபேட்சகர்களின் பெயர்கள் இறுதியாக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

### தமிழ்நாடு இடதுசாரிகள்

தமிழ்நாடு இடதுசாரி கம்யூனிஸ்ட்கட்சியின் ராஜ்யக் கமிட்டி தேர்தல் கூட்டு சம்பந்தமாய் தனது முந்தைய நிலையை ஊர்ஜிதம் செய்தது.

பொதுத் தேர்தலில் காங்கிரசைத் தோற்கடிப்பதற்காக தி மு க, சம்யுக்த சோஷலிஸ்ட், தமிழரசுக் கழகம், வலதுசாரிக் கம்யூனிஸ்ட் ஆகியவற்றுடன் பேச்சு நடத்தி ஐக்கிய ஜனநாயக முன்னணி ஒன்றை அமைப்பது என்ற நிலையை கமிட்டி ஊர்ஜிதம் செய்தது.

கட்சியின் பொதுக்காரியதரிசி எம். ஆர். வெங்கட்ராமன் விடுத்த அறிக்கையில் ஐக்கிய ஜனநாயக முன்னணி அமைப்பதின் நோக்கம், வோட்டுகள் பிளவு படாமல் இருக்க வேண்டும் என்பதே என்று கூறியுள்ளார்.

எதிர்க்கட்சியுடன் ஜனநாயக முன்னணியை அமைக்கும் முயற்சி வெற்றி பெற்றுவிட்டால் தொகுதி வாரியாக அவற்றுடன் உடன்பாட்டுக்கு வரத்தமது கட்சி முயற்சிக்கும் என்றும் அவர் கூறினார்.

ராஜ்யத்தில் தேர்தல் நிதிக்காக ரூபா 4 லட்சம் வசூலிக்க இடதுசாரி கம்யூனிஸ்ட்கட்சி முடிவு செய்திருக்கிறது.

## லண்டனில் இந்திய தேயிலை கம்பெனி பங்குகளின் விலை வீழ்ச்சி

### ரூபாய் மதிப்பு குறைப்பை அமெரிக்கா வரவேற்கிறது

லண்டன், ஜூன் 7

இந்திய ரூபாவின் மதிப்புக் குறைக்கப்பட்டதையடுத்து லண்டன் மார்க்கெட்டில் இந்திய தேயிலைத் தோட்டப் பங்குகளின் விலைகள் நேற்று வீழ்ச்சியடைந்ததாக அறிவிக்கப்படுகிறது. மதிப்புக் குறைப்பை அமெரிக்கா வரவேற்றது. உலகவங்கி இதுபற்றி ஆராய்ந்து வருகிறது.

ஆனால் இந்தியப் பொருளாதாரம் முன்னணிக்கு நகர்ந்து வருவதாக லண்டன் வட்டாரங்களில் கூறப்பட்டது. "துணிச்சலான நடவடிக்கை" என இந்திய வர்த்தகசபைத் தலைவர்கூறினார். இந்த நடவடிக்கை தவிர்க்க முடியாதது என பல பார்லிமெண்ட் அங்கத்தினர்களும், விவேகமற்ற செயல் என வேறு சில எம். பி.க்களும் கருத்துத் தெரிவித்தார்கள்.

### நிதிமந்திரி கருத்து

இதற்கிடையில் ரூபாய் மதிப்புக் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து, விலையேற்றத்தைத் தடுக்க பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவிருப்பதாக இந்திய நிதி மந்திரி திரு. சசீந்திர சௌத்ரி அறிவித்தார்.

வெளி நிர்ப்பந்தம் எதுவும் இதற்குக் காரணம் இல்லையென்றும், 1963-ம் ஆண்டு முதலே இவ்விஷயம் மிகுந்த கவலை அளித்துவந்ததென்றும் கூறிய நிதிமந்திரி பொருளாதாரத்தை வலுப்படுத்துவதுதான் இதன் நோக்கம் என விளக்கினார். பிரான்ஸ் உட்பட நாணய மதிப்பை மாற்றிய சில நாடுகளை அவர் உதாரணம் காட்டினார்.

தனது நடவடிக்கைகள் ளக்கடத்தலையும், பணம் நாட்டைவிட்டு வெளியே செல்வதையும் தடுக்கும் என்றும் அவர் கூறினார். இந்தியப் பண்டங்கள் போட்டிவிலைகளில் உலக மார்க்கெட்டில் விற்பனையாக இது உதவி செய்யும் என்றும் சௌத்ரி கூறினார்.

### ரிசர்வ் வங்கி கவர்னர்

ரிசர்வ்வங்கி கவர்னர் திரு. பட்டாச்சார்யா இது பற்றி கல்கத்தாவில் பேசிய போது, இந்தியா எடுத்துக் கொள்ளவிருக்கும் பல்வேறு நடவடிக்கைகளில் இது ஒரு ஆரம்பமே என்றார்.

"லட்சியத்தை எட்ட வேறு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். பணவீக்கத்தின் நெருக்குதலை அகற்றுதல், விளைபொருள் உற்பத்தியைக் கூடுதல் ஆக்குதல், அந்நிய முதலீட்டுக்கு ஊக்கமளித்தல் ஆகியன இந்த நடவடிக்கையினால் சாத்தியமாகும். வங்கி விகிதம் குறைக்கப்படமாட்டாது" என்றும் திரு. பட்டாச்சார்யா கூறினார்.

### திட்டக் கமிஷன் ஆலோசனை

நேற்று 4-ம் திட்ட வசதி பற்றி திரு. அசோக்மேத்தாவும், திட்டக்கமிஷன் உறுப்பினர்களும் நிதிமந்திரியுடன் ஆராய்ந்தார்கள். திட்டம் வகுப்பதில் ரூபாய் மதிப்புக் குறைவினால் ஏற்படும் விளைவுபற்றி அவர்கள் ஆராய்ந்தார்கள்.

### பிரதமர் அழைப்பு

ரூபாய் மதிப்புக் குறைக்கப்பட்டது குறித்துப் பேச பார்லிமெண்டிலுள்ள பல கட்சித் தலைவர்களையும், தம்மைச் சந்திக்கும்படி பிரதமர் இந்திரா அழைப்பு விடுத்திருக்கிறார்.

## பதுக்கல் ஆயுதம் பிடிபட்டது

ஸ்ரீநகர், ஜூன் 7

ஜம்மு காஷ்மீரிலுள்ள ஓரிடத்தில் பதுக்கப்பட்டிருந்த ஏராளமான ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் உளவுப்பொலிசார் கண்டுபிடித்திருக்கின்றனர். இந்த ஆயுதங்கள் பாகிஸ்தான் அடையாளங்களுடன் காணப்படுகின்றன என்றும் சிலர் கைதுசெய்யப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

## 30-ம் திகதி பிரெஞ்சு சோதனை

பாரிஸ், ஜூன் 7

வருகிற 30-ம்திகதி தென் பசிபிக்கில் தான் அணு சோதனை நடத்தப்போகும் பகுதியிலிருந்து விலகியிருக்குமாறு விமானங்களுக்கும், கப்பல்களுக்கும் பிரான்ஸ் விண்ணப்பித்திருக்கிறது.

## "எல்லாவேலைகளும் இந்தியருக்கே கிடைக்கின்றன"

### கென்யா எம். பி.க்கள் தாக்கு

நைரோபி, ஜூன் 7

"பல இந்தியர்கள் கென்யாவில் இன்னும் புகுந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் சில ஆண்டுகளுள் ஒரு இந்தியரே கென்யா ஜனாதிபதியாக வந்தால் ஆச்சரியப் படுவதற்கில்லை" என மார்ட்டின் ஷெயகு கூ எம். பி. கூறினார்.

"ஆபிரிக்கர்களுக்கே எல்லா வேலையும் தர வேண்டும். கினியா பிரஜைகளின் வேலைகளுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும்" என பல எம். பி.க்கள் கோரினர்.

ஆபிரிக்கர்களுக்கு வேலை கொடுப்பதற்கு தனியார் கம்பெனிகள் முட்டுக்கட்டை போடுவதாயும், அவர்கள் அயல் நாடுகளிலிருந்து ஆட்களைக் கொண்டுவருவதாயும் திரு. கூ குற்றஞ்சாட்டினார்.

காட்டுகுட்ட என்ற அங்கத்தினர் கூறியதாவது:

"கம்பெனி நடத்தும் ஐரோப்பியர்களும், ஆசியாக்காரர்களும் தமக்கு வேண்டிய ஊழியர்களைத் தாமே தருவித்துக் கொண்டிருக்கின்றனர். வெளிநாடுகளிலிருந்து கென்யாவுக்கு வந்திருப்பவர்கள் அதிகமாகச் சம்பாதிக்கின்றனர். ஊருக்குத் திரும்புகையில் எல்லாம் எடுத்துச் சென்றுவிடுகிறார்கள். எனவே ஆபிரிக்கர்களுக்கு வேலை கொடுப்பதை கட்டாயமாக்க வேண்டும். சில அந்நிய கம்பெனிகளே ஆபிரிக்கர்களுக்கு உத்தியோக பயிற்சி அளிக்கின்றன" என்றும் காட்டுகுட்ட கூறினார்.

## ஐ. நா. வுக்கு கயானு விண்ணப்பம்

ஜார்ஜ்டவுன், ஜூன் 7

ஐ நா. வில் தன்னை ஒரு அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளும்படி, கயானு விண்ணப்பித்திருக்கிறது.

## கப்பல் மூழ்கியது

கல்கத்தா, ஜூன் 7

5500 டன் அரிசியுடன் வந்த ஒரு பர்மாக் கப்பல் ஹுக்ளி ஆற்றில் மூழ்கி விட்டதாய் அறிவிக்கப்படுகிறது.

## யுதாண்ட் நீடிப்பாரா?

நியூயோர்க், ஜூன் 7

ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்டின் தற்போதைய பதவிக்காலம் நவம்பர் 3ம் திகதியுடன் பூர்த்தியாகிறது. மேலும் 3 ஆண்டுக் காலம் நீடிப்பதா இல்லையா என்பதை அவர் இம்மாதம் பாதுகாப்புச்சபை அங்கத்தினர்களுக்கு அறிவித்துவிடுவார்.

எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வேறு யாரும் தற்போது இருப்பதாகத் தெரியவில்லை. எனவே பதவியில் நீடிப்பதென அவர் முடிவுசெய்யக்கூடுமெனத் தெரிகிறது.

ஜூன் 20ம் திகதி ஐ. நா. நிருபர்கள் சங்க விருந்துக் கூட்டத்தில் யுதாண்ட் கலந்துகொள்ளவிருக்கிறார். அப்போது அவர் தம் முடிவை அறிவிக்கக்கூடும்.

நீடிப்பதென அவர் முடிவுசெய்தால் எல்லாத் தரப்பினரும் அவரை ஏற்பா[illegible] நிச்சயமில்லை. வல்லரசுகளுள் பிரிட்டனும், பிரான்ஸும் அ[illegible]மென ஏற்கனவே விருப்பம் தெரிவித்திருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணி வாக்கு

நீங்கள் நல்ல இந்துக்களாக விரும்பினல் கடவுளை உண்மையாக வழிபட விரும்பினல், இந்து சமயத்தைக்காக்க விரும்பினல் நீங்கள் உங்கள் கோவில்களை எல்லாம் தீண்டாதார் எனப்படுவோருக்கும் திறந்துவிடவேண்டும். தன் பக்தர்களுக்கிடையே கடவுள் வேற்றுமை காட்டுவதில்லை,

—மகாத்மா காந்தி

ஈழநாடு

EELA NADU, National Tamil Daily Post Box 49, JAFFNA

யாழ்ப்பாணம் பராபவ ஆ வைகாசி ௴ 26 ௳ (8-6-66)

## சரியான தீர்மானம்

இந்தியா தனது ரூபாயின் மதிப்பைத் திடீரெனக் குறைத்துவிட்டதால், இலங்கையும் அதைப் பின்பற்றி தனது ரூபாயின் மதிப்பைக் குறைக்க வேண்டுமென்றும் இல்லாவிடில் நமது தேயிலை ஏற்றுமதி பாதிக்கப்படுவதுடன், இங்கிருந்து மூலதனம் வெளியேறுமென்றும் சில நிபுணர்கள் யோசனை கூறியிருந்தனர். இந்த மிக முக்கிய விஷயத்தைப் பற்றி இலங்கை மந்திரிசபை தீவிரமாக ஆலோசனை செய்து, நம் ரூபாயின் மதிப்பைக் குறைப்பதில்லை என்று செய்துள்ள தீர்மானம் சரியானதென்பதே நமது கருத்து.

ரூபாயின் மதிப்பைக் குறைப்பதென்றல் என்ன? ஏன் பல வருடகாலமாக இந்த நடவடிக்கையை எடுக்கத் தயங்கிய இந்தியா, இப்போது இம்மாற்றத்தைச் செய்ய வேண்டியேற்பட்டது? இதனல் இந்தியாவுக்கு ஏற்படக்கூடிய நன்மை தீமைகள் என்ன? பலவிதங்களிலும் இந்தியாவுடன் பிணைந்துள்ள இலங்கை, இவ்விஷயத்தில் இந்தியாவைப் பின்பற்றத்தான் வேண்டுமா? பின்பற்றினல் நன்மை தீமைகள் என்ன ஏற்படும்? என்பன மிக முக்கிய கேள்விகள். இவ்விஷயம்பற்றி இந்தியாவில் மட்டுமன்றி இலங்கையிலும் நிபுணர்களிடையே தீவிர கருத்து வேற்றுமைகள் உண்டு. இந்தியா எடுத்த நடவடிக்கை மிக ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்துமென்று "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகை எச்சரிக்கை செய்துள்ளது. இங்கும் சில நிதி நிபுணர்கள் கூறிய யோசனைகளுக்கு மாருக நமது அரசாங்கம் இந்தத் தீர்மானத்தைச் செய்ததற்கு மிக முக்கியமான காரணம் இருக்க வேண்டும்.

இவ்வித விஷயங்களில் எந்த யோசனையிலும் நன்மையும் தீமையும் கலந்தே இருக்கும். தீமையைவிட அதிக நன்மை இருக்குமென்ற நம்பிக்கையில் தான், நமது ரூபாயின் மதிப்பை மாற்றுவதில்லை என்று இலங்கை அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது. இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பொருளான தேயிலைக்கு உலக மார்க்கெட்டில் இனி கிராக்கி குறையுமென்றும், இந்தியத் தேயிலை அதிகம் விற்பனையாகுமென்றும், ரூபாய் மதிப்பைக் குறைக்க வேண்டுமென்று கூறுபவர்கள் வாதிக்கின்றனர். தன் ரூபாயின் மதிப்பையும் அதனல் உலக மார்க்கெட்டில் இந்தியத் தேயிலையின் விலையைக் குறைத்துள்ளதும் நமது தேயிலையின் ஏற்றுமதியை ஓரளவு பாதிக்கலாமென்பது உண்மை. ஆனல் நேற்று முன்தினம் கொழும்பில் நடந்த தேயிலை ஏலத்தில் நமது தேயிலையின் விலை எவ்வித மாற்றமுமில்லாமல் உயர்வாகவே இருந்தது குறிப்பிடத்தக்கது. இலங்கைத் தேயிலைக்கு சிறப்பாக பிரிட்டனிலும் உலக மார்க்கெட்டிலும் நல்ல கிராக்கி உண்டானகையால், சற்றே அதிக விலை கொடுத்தேனும் நம் உயர்ந்த தேயிலையையே உலக நாடுகள் வாங்குமென்று எதிர்பார்ப்பது அதிக தவருகாது.

இதற்கு மாருக, நம் ரூபாயின் மதிப்பை இந்தியாவைப் பின்பற்றி குறைப்பதாயின் இங்கு பல பாரதூரமான விளைவுகள் ஏற்படும். இந்தியாவைப் போலல்லாது நாம் உணவுக்கும் உடை முதலியவற்றுக்கும் வெளிநாடுகளையே அதிகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேம். நம் ரூபாயின் மதிப்பை குறைப்பதின் மூலம், இறக்குமதி அரிசி, துணி முதலியவற்றுக்கு நாம் அதிகவிலை கொடுக்க வேண்டியிருக்கும். இதனல் வாழ்க்கைச் செலவுகள் உயரும். இங்கு சம்பளக்காரர்களுக்கு அளிக்கப்படும் ஊதியத்தின் உண்மை மதிப்பும் குறைந்து, சம்பளத்தை அதிகரிக்க வேண்டுமென்ற கிளர்ச்சிகளும் பெருகும். பொதுமக்களின் மேலான நன்மையைக் கருதியே இலங்கை அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை துணிச்சலுடன் செய்தது பாராட்டத்தக்கது.

இந்தியா, இலங்கை முதலிய தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பொருளாதாரம் பல விதங்களிலும் பிணைக்கப்பட்டுள்ளன. ஆகவே தனது நாணய மதிப்பை மாற்றும் மிகமுக்கிய விஷயத்திலே இந்தியா, மற்ற அண்டை நாடுகளையும் சிறப்பாக இலங்கை, பாகிஸ்தான் இருநாடுகளையும்கலந்து கொண்டு தீர்மானம் செய்வது பெரிதும் விரும்பத்தக்கது. நமக்கிடையே பொருளாதார விஷயங்களில் ஒத்துழைப்பும் நல்லெண்ணமும் நிலவ இது பெரிதும் உதவக்கூடும். இந்தியா மேற்குறித்த மிகக்கசப்பான தீர்மானத்தை, உலக வங்கியின் நிர்ப்பந்தம் காரணமாகச்செய்ய வேண்டி நேரிட்டதாகக் கூறப்படுகின்றது. இது எப்படியாயினும், இந்தியாவுக்கு இதனல் உண்மையில் அதிக பாதகமிருப்பின் சீக்கிரத்தில் புனராலோசனைசெய்து திருத்திக்கொள்வது தவருகாது தென்கிழக்கு ஆசிய நாடுகள், இவ்விதபொருளாதார விஷயங்களில் ஒத்துழைப்பதில் தான் இப்பகுதி மக்களின் சுபீட்சமும் முன்னேற்றமும் அடங்கியிருக்கும்.

## இந்திய ரூபாயின் விலைமதிப்பு குறைவு

இந்திய ரூபாயின் விலை மதிப்பு 36.5 வீதமாகக் குறைக்கப்பட்டதை நிதி மந்திரி திரு. சச்சின் சௌத்திரி ஞாயிற்றுக்கிழமைஇரவு ஒரு விசேஷ ஒலிபரப்பில் தெரிவித்தார் இந்த நடவடிக்கை இந்தியாவின் தற்போதைய பொருளாதார நிலைக்கு மிகவும் அவசியமானதென்று அவர் தெரிவித்தார். விலை மதிப்பு குறைப்பின்பலனக இப்பொழு ஒரு அமெரிக்க டொலரின் பெறுமதி 7.5 இந்திய ரூபாயாகிறது ஒருபிரிட்டிஷ் பவுண்ட் இருபத்தொரு ரூபாயாகிறது. ஒரு ரஷ்ய ரூபிள் எட்டு ரூபா முப்பத்திமூன்று சதமாகின்றது. இதற்கு முன் இவற்றின் பெறுமதி முறையே ரூபாய் 4 76, 13.33, 5.21 ஆகும்.

திரு. சௌத்திரி தமது ஒலிபரப்பில் ரூபாயின் மதிப்பு பத்து வருடத்திற்கு முன் இருந்ததைப் போல இப்பொழுது இல்லையென்றும் உள்ளூர் விலைகள் வருடத்திற்கு வருடம் அதிகரித்து வந்துள்ளனவென்றும் 10 வருடங்களுக்கு முன்பைவிட இப்பொழுது விலைகள் 80 வீதம் அதிகரித்து விட்டனவென்றும், ஆனல் அதேசமயம் ஒரு ரூபாயின் விலை 1949-ம் வருடத்திற்கு பின் மாருமல் இருந்து வந்திருக்கிறதென்றும் கூறினர்.

நாம வர்த்தகம் செய்யும் முக்கியமான பிறநாடுகளில் இந்தவிதமான விலையேற்றம் இல்லாத காரணத்தினல் எமது ஏற்றுமதிகளுக்கு அவ்விடங்களில் கிராக்கி இல்லாமல் போய்விட்டது அதே சமயம் எமது ஏற்றுமதிகளை அதிகரிக்கவும் அன்னிய செலாவணியை பெருக்கவும் நமக்கு நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது எமது ஏற்றுமதிகளுக்கு நல்ல விலை பெறுவதற்காகப்பல விதமான பிரயத்தனங்கள் செய்தும் அவை பலனளிக்கவில்லை. ரூபாயின் விலையைக் குறைப்பதனல் இந்திய ஏற்றுமதிகளுக்கு கூடுதலான கிராக்கி ஏற்படும் என்று நம்புவதாக அவர் கூறினர். விலைமதிப்பு குறைப்பினல் இறக்குமதிகளின் விலைகளும் உயரும். ஆதலினல் உள்ளூர் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், உள்ளூர் உற்பத்திப பொருட்கள ஏற்றுமதி ஆகாமல் இருப்பதற்கும் இது ஏதுவாகின்றது

சர்வதேச நாணய நிதி உலக வங்கி ஆகியவற்றின் ஆலோசனையின் பேரில் தான் தேசம் முழுவதையும் அதிர்ச்சியுறச் செய்த இந் நடவடிக்கை எடுக்கப்பட்டதென புதுடில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதை சில மந்திரிகள் கண்டனம் செய்ததாகவும் ஆனல் திட்ட மந்திரி திரு. அசோக் மேத்தாவும் உணவு மந்திரி திரு. சுப்பிரமண்யமும் அதைப்பலமாக ஆதரித்ததாகவும் தெரியவருகிறது.

'இந்தியன் எக்ஸ்ப்ரஸ்' பத்திரிகையின் நிதி ஆசிரியர் ரூபாய் விலைகுறைப்பு இதன் கர்த்தாக்களான நிதி மந்திரிக்கும் திட்ட மந்திரிக்கும் புகழை தேடிக் கொடுக்கமாட்டாதென்றும் நாட்டின் பொருளாதாரத்திற்கு எவ்விதநம்பிக்கையுமே உண்டாகாதென்றும் அபிப்பிராயம் தெரிவிக்கிறர் பல வருடங்களாகப் படாடோபமான திட்டங்களில் ஈடுபட்டு வரவுக்கு மிஞ்சிய செலவை ஏற்படுத்தியதன் விளைவாகவே இது நேர்ந்திருக்கிறது. இந்திய அரசாங்கம் மேற்கத்தைய நாடுகளுக்கு [illegible] விட்டுக்கொடுக்க நேரிட்டதை இது காட்டுகிறது. விலை மதிப்பு குறைப்பு முதவில் இன்பமாக இருக்கும். பிறகு அடிக்கடி அதை சுவைக்கவேண்டிய ஆவல் சளும் முந்திய நிதிமந்திரி திரு. ரி. ரி. கிருஷ்ணமாச்சாரி மிகவும் பொருத்தமாகக் கூறியதுபோல அது ஒரு போதை கொடுக்கும் வஸ்து. இந்நடவடிக்கையினல் இந்தியா இந்தோனேஷியாவை பின்பற்றுகிறது. இந்தியாவின் பொருளாதாரத்திற்கு இது உதவியாயிருக்குமென்று மந்திரி கூறுவதை ஆமோதிக்க முடியாதென்றும் அவர் கூறினர். உண்மையான சங்கதி என்னவென்றல் ரூபாய் விலை குறைப்பினல் 36.5 விகிதம் வியாபாரம் தாக்கப்படுகிறது. அரசாங்கம் தனது கொள்கைகளை மாற்றி இக்களத்தை பேணு விட்டால் மேலும் விலை குறைப்புக்கள் ஏற்படக்கூடும். மத்திய அரசாங்கமும் ராஜ்யங்களும் ஏற்கனவே நிதி விஷயங்களில் ஒழுக்கமாகவும் சிக்கனமாகவும் நடந்திருந்தால் இந்த துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்பட்டிருக்கமாட்டாது என்றும் அவர் கூறுகிருர்

ரூபாவின் விலை 36.5 வீதம் குறைக்கப்பட்டுள்ளதென்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் செயல்முறையில் அது 57 5 வீதம் ஆகிறதென்று இன்னெரு புதுடில்லி செய்தி தெரிவிக்கிறது. இதன் அர்த்தம் என்னவென்றல் முன்பு 100 ரூபாவிற்கு வாங்கப்பட்ட இறக்குமதி பொருட்களின் விலை இனிமேல் ரூபா 157.50 சதமாகும்.

## ஐயாறன் எழுதுகிறது

உரும்பராயிலிருந்து ஓர் அன்பர் மிக மனவேதனையுடன் ஒரு செய்தியைச் சொன்னர். அங்கு புகழ் பெற்றபார்வதவர்த்தினி அம்பாள் ஆலயம் இரண்டு மாதங்களுக்குமேல்பூட்டப்பட்டு கிடக்கிறதாம், பூசையில்லை. இவ்வருடம் திருவிழாவும் நடக்கவில்லை, திருவிழாவை நடத்தினல் ஹரிஜனங்களும் ஆலயத்துக்குள் வந்துவிடலாமென்றும், ஆகவே திருவிழாவை நடத்தவேண்டாமென்றும் ஆலய நிர்வாகிகள் தீர்மானித்து கோவிலையே பூட்டியுள்ளதாகவும், மற்ருேர் கட்சியினர் அதற்குமேல் ஒரு பூட்டு பூட்டியுள்ளதாயும், அந்த அன்பர் தெரிவித்து, கோவிலில் பூசையும்திருவிழாவும் நடைபெறச்செய்யவேண்டுமென்றும் சொன்னர். இதையெல்லாம் கேட்க மிகத் துக்கமாகவும் வெட்கமாகவும் இருந்தது.

ஃ ஃ ஃ

சில வருடங்களுக்கு முன்பாக உரும்பராயிலுள்ள சிதம்பர சுப்பிரமணியன் ஆலயத்துக்குச் சென்று தரிசித்தேன். அங்கு பக்தர்கள் யாவரும் சாதிவேற்றுமையின்றி வந்து வழிபட முருகன் திருவுள்ளம்கொண்டிருந்ததாயும், கோவில் திருப்பணிக்கு அவ்வூர் அன்பர்கள் பலரும் அள்ளி அள்ளிக் கொடுத்ததையும் காண, அவ்வூர் மக்கள்மீது எனக்குப் பெருமதிப்பு ஏற்பட்டது.

முருகன் கோவிலில் இந்துக்கள் யாரும் தாராளமாக வந்து வழிபடமுடிகையில், கருணையே வடிவமான அன்னை பார்வதவர்த்தினியை வழிபட முடியாதபடி ஏன் தடுக்கவேண்டும்? என்பது புரியவில்லை.

ஃ ஃ ஃ

கோவிலிலே பூசைகள் சரிவர நடைபெருவிடில், அது பெரிய பாவம். அந்த சமூகத்துக்கே, ஊருக்கே கேடாகும். வைகையிலே வெள்ளம் பெருகி, மதுரைமாநகரை அழிக்கவந்தபோது பாண்டியன் தன் அமைச்சரை அழைத்து, கோவில் பூசைகள் சரிவர நடக்கவில்லையா? அல்லது பெரியோர் உள்ளத்தை நோகவைத்தேனே என்று கேட்டானம். இதிலிருந்து கோவில் பூசைகள் சரிவர நடைபெருவிடில் ஊருக்கே தீங்கு ஏற்படுமென்று தெரிகிறது.

திருவிழாக்களை நடத்துவது ஊரில் வேற்றுமைகளை நீக்கி, ஒற்றுமை ஏற்படுத்தவும், மழை சரிவரப்பொழிந்து, ஊரமக்கள் எல்லா நலன்களையும் பெற்றுச் சுகமாக வாழவும்தான். கோவிலையும் பூட்டி. திருவிழாவையும் நடத்தாவிடில், அது எவ்வளவு பெரியபாவமென்பதையும், ஊருக்கு அதனல் எவ்வளவு தீங்கு என்பதையும் விளக்கத்தேவையில்லை.

மதுரையிலே மீனட்சிதன் கோவிலில் யாரும் வந்து வழிபடலாமென்று கருணையுடன் கதவைத் திறந்துவிட்டுவிட்டாள். முதலிலே சிலர் எதிர்த்தனர். ஆனல் சிலநாட்களில் எதிர்ப்பு பிசுபிசுத்தது. இப்போது அக்கோவில் நித்ய கல்யாணமாகக் காட்சியளிக்கின்றது. சிதம்பரம், பழனி, ஸ்ரீரங்கம் முதலிய பல பெரிய ஆலயங்களையும் எல்லா இந்துக்களுக்கும் திறந்து விட்டுவிட்டனர். யாழ்ப்பாணத்திலே நல்லூர்க்கோவில் உள்ளிட்டு பல முக்கிய ஆலயங்களில் பக்தர்கள் அனைவரும் வந்து சாதிவேற்றுமையின்றி வழிபடுகின்றுர்கள் அப்படியிருக்க உருமபிராய்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

அம்மனிடம் வந்து அவளது அருமைக் குழந்தைகளில ஒரு சிலர் வழிபடமுடியாதபடி ஏன் தடுக்கவேண்டும்? யார் இதற்குக் குறுக்கே நின்று, கோவிலில் பூசையின்றியும் திருவிழாவின்றியும் செய்கிருர்களோ அவர்கள் வீண் பாவத்தைக் கட்டிக்கொண்டவர்களாவர். அவர்களுக்கும் அவர்களது குடும்பத்துக்கும் இது நல்லதல்ல.

5 — மாடும்பர்வத வர்த்தினிகளான அங்குள்ள தாய்மார்கள், தங்கள் குடும்ப நலனையும், ஊர்நலனையும் கருதி. அக்கோவிலை உடனடியாகத் திறக்கவும், யாரும் தடையின்றி வந்து வழிபடவும், பூசை, திருவிழாக்கள் வழமைபோல் நடைபெறவும் செய்ய, முன்வரவேண்டும். அவர்கள் மனம்வைத்தல் எதுதான் நடவாது? இந்து சமயத்தையும் சமூகத்தையும் காப்பது நம் தாய்மார்கள்தான். இம்முக்கிய விஷயத்தில் அவர்கள் முன்வந்து, இந்தப் பெரும் பாவத்தை நீக்குவத. அவ்வூருக்கு மட்டுமன்றி நாட்டுக்கே மேலான முன்மாதிரியாக இருக்கும். நல்ல பக்தியும் அறிவும் உள்ள அவ்வூர் மக்கள, இதை உடன் செய்வார்களென்ற பூரண நம்பிக்கையுடனேயே இதை எழுதுகின்றேன்.

ஃ ஃ ஃ

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து தரணியொடு வானளத்தருவரேனும், மங்குவார் அவர்செல்வம் மதிப்போமல்லோம் மாதேவர்க் கேகாந்த ரல்லராகில், அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயராய் ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும், கங்கைவார் சடைக் கரந்தார்க்கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்குங்கடவுளாரே.

—அப்பர்சுவாமிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமரப்பெருமானின் குன்றுதபேரருள்

— பண்டிதர் வ. மு. இரத்தினேசுவர ஐயர் —

[இவ்வாரம் குமரகுருபரர் தினம் கொண்டாடப்பட்டதையொட்டி இக்கட்டுரை எழுதப்பெற்றது]

மக்கட்பிறப்புச் சிறந்தபயனுடையது, எதனால்? கடவுளருளால். கடவுட் சிந்தனை குன்றினால் பின்பு ஆன்மா எக்கதியடையும் என்ற உணர்ச்சி தோன்ற வேண்டும். கலியுகவரத கருணாமூர்த்தியாகிய செந்திலாண்டவரின் அருள்வேண்டி நம்பிவழிபட்ட ஒரு குடும்பத்தில் ஒரு ஊமைப்பிள்ளை தோன்றி அரிய புலமையும் தொண்டும் ஆற்றியதையே இங்கு சிறிது காட்டுவாம்.

## பிறப்பு

செந்தமிழ் நாட்டில் ஸ்ரீவைகுண்டம் என்பது ஒரு தலம். திருச்செந்தூர் செல்லும்பாதையில் அந்நகரம் உள்ளது. அங்கு சண்முகசிகாமணிக் கவிராயர் சிவகாமசுந்தரி அம்மையாரை விவாகஞ்செய்து ஒரு புத்திரனைப் பெற்றனர். பிதா மாதாக்கள் மனமகிழக் குழந்தை வளர்ந்தது. அதுபேசவில்லை; அதனால் அவர்கள் மனம்வருந்திச் செந்திலாதிபனை வழிபடச் சென்று நித்திய விரதராய்த் திருச்செந்தூரில் வசித்து வந்தனர். நாற்பத்தைந்துநாளில் மகன் பேசாவிட்டால் தாங்கள் பிராணத்தியாகம் செய்வது என்று சங்கற்பித்து வதனாரம்பத் தீர்த்தத்தில் மூழ்கி குமரநாயகன்பாதாரவிந்த வழிபாடு செய்திருந்தனர். வேண்டுதார் வேண்டுவதை அருளும் விமல சிவகுமரன், ஒருநாள் விடியுமுன் குழந்தைக்குக் கனவிலே வெளிப்பட்டுப் பேரருள் பாலித்தார்.

## பாடல் இயற்றல்

பிதா மாதாக்களை அப்பா அம்மா என்று அழைத்த குழந்தையைக்கண்டு பெற்றோர் ஆனந்தமடைந்தனர். சுவாமிதரிசனஞ் செய்தபின் குழந்தைக்கு முருகப்பெருமான் கிருபையால் கவிபாடுஞ் சக்திஉண்டாயிற்று. அப்போது பாடியதுதான் ''கந்தர் கலிவெண்பா'' என்பது.

''பூமேவு செங்கமலப்
புத்தேளுந் தேடரிய
பாமேவு தெய்வப்
பழமறையும்''

என்று தொடங்கி வேதாகம நெறியில் சுத்தாத்துவிசைவ சித்தாந்தச் செழும்பொருள் செறிந்து யாவர்க்கும் இன்பந்தோன்ற அச்சிறுவர்பாடினார். குமரப் பெருமானால் அடிமைகொள்ளப்பட்டமையால் குமரகுருபரர் என்னுந் திருநாமத்துடன் அக்குழந்தை பெரியோராக விளங்கியது. இலக்கண இலக்கிய உணர்ச்சியில் குமரகுருபரர்சிறந்த பாடல்களையும் பாடும் திறமை பெற்றார். செந்திலாண்டவர் குமரகுருபரரை வாக்குத்தடைபட்ட இடத்தில் ஆங்குள்ள பரமாசாரியரைக் குருவாகக் கொள்ளும்படி அருளிச்செய்தார். பின்பு தம்பியார் குமார தேவருடன் ஸ்தலயாத்திரை செய்தார். மீனாட்சியம்மையார் பிள்ளைத்தமிழ்பாடிவந்தார். திருப்பரங்கிரியில் வந்து தங்கி அவர் இருந்தார். அருள்தான் சக்தி. அச்சத்தியின் கருணைமழை குமரகுருபரர் உள்ளம் குளிரச் செய்தது.

## பிள்ளைத்தமிழ் பாடுதல்

குமரகுருபரர் மீனாட்சி அம்மையார் பிள்ளைத்தமிழைப் பாடிவந்தார். அத்திவ்வியபிரபந்தமோ மெய்ஞ்ஞான நெறிகாட்டும் சுத்தாத்துவித சைவசித்தாந்தப் பொருள்நிறைந்தது. சைவசித்தாந்தம் அருளிய பரமாசாரியர்களும், சமயகுரவர்களும் சைவசமயம் வளர்த்த சிரியோரே. சித்தர்கள் சித்தாந்தம் செய்னர் என்று ஆதாரமின்றிக் கூறுவது வெற்றுரையேயாம்.

மீனாட்சியம்மையார் திருமலைநாயக்கர் கனவில் தோன்றி ''நமது குமரனாகிய சுப்பிரமணியனுடைய அருள்பெற்ற ஒருவன் நம் மீதுபிள்ளைத்தமிழ் பாடிக்கொண்டு திருப்பரங்குன்றத்தில் வந்திருக்கிறான். அவனை வரிசைகளுடன் அழைத்துவந்து நமது சந்நிதானத்தில் அரங்கேற்றச் செய்வாயாக என்றருளிச் செய்தார். திருமலைநாயக்கர் விழித்தெழுந்து இறைவியை வணங்கிப் பரிவாரங்கள்சூழத் திருப்பரங்குன்றத்திற்குப்போய்ச் சுவாமிகளை வணங்கி அம்பாள் அருளிச்செய்ததைக்கூறி அழைத்துவந்தார். மீனாட்சி கோயிலை அடைந்து விநாயகப்பெருமானையும் அம்பாளையும் சுவாமியையும் தரிசித்தார். அம்பாள் இளம் திருவுருவைக் குமரகுருபரருக்குக் காட்டியருளினார். குமரகுருபரர் பிள்ளைத் தமிழுக்குப் பரிசு கிடைத்ததுபோல் மகிழ்ந்தார். பின்பு அம்பாள் சந்நிதானத்தில் பிள்ளைத்தமிழ் அரங்கேற்றப்பட்டது குமாரகவிகள் படிக்கக் குமரகுருபரர் பொருள் கூறிவந்தார். வருகைப்பருவத்தில் ஒரு அரிய பாசுரம் கூறிப் பொருள் விரித்தபின் மீனாட்சி அம்மையார் அர்ச்சகனை குழந்தைபோல திருவுருத்தாங்கி அங்கே வந்து பிள்ளைத் தமிழைக் கேட்டுவந்தார்.

முத்தப்பருவத்தில் 'காலத்தொடு கற்பனை கடந்த'' என்று தொடங்கிய பாடலைக்கேட்டிருந்த குழந்தை வடிவினராகிய மீனாட்சி அம்மையார், குமரகுருபர அடிகளாருக்கு முத்துமாலை சூட்டியருளினார். இப்படியே அருமையும் பெருமையும் சிவணிய பிள்ளைத்தமிழ் அரங்கேற்றப்பட்டது. பின்பு, திருமலைநாயக்கர் பலவரிசைகளளித்தார்,

குமரகுருபரசுவாமிகள் மீனாட்சிஅம்மை இரட்டைமணிமாலை மீனாட்சி அம்மைகுறம் என்பவற்றையும் இயற்றினார். குறத்தில் ஒரு பா வருமாறு:-

மந்தமாருதம் வளரும்
மலையெங்கள் மலையே
வடகலை தென்கலை பயிலும்
மலையெங்கள் மலையே
கந்தவேள் விளையாடு
மலையெங்கள் மலையே
கனகநவமணி விளையுமலை
யெங்கள் மலையே
இந்தமாநிலம் புரக்கு
மங்கயற்கண்ணம்மை
இன்பமுறுந்தென்பொதிய
மலையெங்கள் மலையே.

வடகலையுந் தென்கலையும் சமமுடையன என்பது இச்செய்யுளில் காணப்படுவதைத் தமிழக மக்கள் சிந்திக்கவேண்டும்.

குமரகுருபரசுவாமிகள். தருமபுராதீனத்து ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணிதேசிகரவர்களிடம் உபதேசம்பெற்ற சிவகுமரவேறுபாடு கருதாத உத்தமசித்தமுடையவர் காசியில் அக்கால மகமதிய அரசினரிடம் இடம்பெற்றுத் திருமடம் அமைத்தவர். காசிமடம் என்றபெயருடன் திருப்பனந்தாளில் குமரகுருபரசுவாமிகள் தினம் இன்றும் உளது. காசிமடம் நன்கு பரிபாலிக்கப்படுகின்றது.

## அற்புதச் செயல்

குமரகுருபர அடிகள் காய்ச்சிய இரும்பைக் கையில் தாங்கிச் சைவசமயத் தாபனஞ் செய்தார். உயிர்ச்சிங்கத்தில் ஏறி மன்னன் முன் சென்றார். மாமிசங்களைப் புசிக்குமாறு அரசன் கேட்டுத் தாம்பாளத்தில் கொண்டு வந்து வைக்க அவைகள் யாவும் புதுப்பூக்களாகக் காணச்செய்தார்.

நூல்கள்:—மதுரைக்கலம்பகம், திருவாரூர் நான்மணிமாலை, சிதம்பர செய்யுட்கோவை, காசிக் கலம்பகம், சகலகலாவல்லி மாலை ஆதியன. ஸ்காலிபுலாக நியாயம்பற்றிச் சில இங்கே காட்டப்பட்டன.

இவ்வுத்தம திருவுடைக் குமரகுருபரர் குருபூசை 5-6-66 வைகாசி 23-ல் வருகிறது. திருப்பனந்தாள் காசிமடாலயத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் [illegible] நடாத்தி வருவதைத் தமிழன்பர்கள் அறிவார்கள்.

# யாழ். ஆஸ்பத்திரியின் நிர்வாகச் சீர்கேடு

## சுகாதார அமைச்சுக்கு ஆஸ்பத்திரி குழுத் தலைவர் புகார்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண அரசினர் ஆஸ்பத்திரிக் குழுவின் தலைவர் டாக்டர் கே கனகரத்தினம் யாழ்ப்பாணம் வைத்திய அத்தியட்சகரைப்பற்றியும் ஆஸ்பத்திரி நிர்வாகத்தைப்பற்றியும் ஒரு நீண்ட கடிதத்தில் சுகாதார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசிக்கு முறையிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: யாழ். வைத்திய அத்தியட்சகர் ஆஸ்பத்திரிக் குழுவுடன் ஒத்துழைக்கவில்லை. நாங்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் ஆஸ்பத்திரியின் முன்னேற்றத்திற்கான ஒத்துழைப்பையும் ஒற்றுமையையும் பெறாததால் நாங்கள் மேற்கொண்ட நோக்கங்கள் தோல்வியடைந்துள்ளன.

மலசலகூடங்கள் திருப்தியான முறையில் இல்லை. இவைகளை மேற்பார்வை செய்யும் சுகாதாரப் பரிசோதகர் இவற்றை திருப்தியான முறையில் மேற்பார்வை செய்ய வேண்டும். ஆஸ்பத்திரிகளில் வார்ட்டுகளில் போதிய விளக்குகள் சரியான முறையில் இல்லாததால் யாழ்ப்பாணத்தில் மின்சார விநியோகத்தடை ஏற்படும்போது நோயாளிகள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

கட்டாக்காலி ஆடு மாடுகள் ஆஸ்பத்திரியில் எப்பொழுதும் காணப்படுகின்றன. அத்துடன் சிறுவர் சிறுமியர் காலையிலும் மாலையிலும் உணவுப் பொருட்களை ஆஸ்பத்திரிக்குள்விற்று வருகின்றனர்.

திருமதி செல்வரத்தினத்தின் சடுதி மரணம்பற்றி யாழ். வைத்திய அத்தியட்சகருக்குக் கடிதம் ஒன்று எழுதியிருந்தேன். இந்த நோயாளி பிரசவ வார்ட்டுக்கு ஆபத்தான நிலைமையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால் அவரின் இனத்தவர்கள் வைத்திய அத்தியட்சகரின் உத்தரவின்பேரில் வெளியேற்றப்பட்டனர். நோயாளி அனுமதிக்கப்பட்ட நேரம் தொடக்கம் காலையில் அவர் இறக்கும் வரை அவரைச் சரியான முறையில் கவனிக்கப்படவில்லையெனக் கூறப்படுகிறது. இறந்தவரின் கணவன் ஒருவாறு ஆஸ்பத்திரிக்கு மறுநாள்காலை சென்றபொழுது நோயாளி இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. இதுசம்பந்தமாக ஒரு அறிக்கையை நான் தருமாறு கோரியிருந்தேன். அதனை இன்னும்எதிர்பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றேன்.

வழக்கமாகச் சத்திர சிகிச்சை செய்யும் முறை ஆஸ்பத்திரியில் நிறுத்தப்பட்டுவிட்டது. இவை எதற்காக எனத் தெரியவில்லை. ஆஸ்பத்திரி சபையைப் பொறுத்தவகையில் எல்லா விஷயங்களும் எங்களுக்கு இருட்டடிப்புச் செய்யப்பட்டுவிட்டன.

மேலும் குழுவின் தீர்மானங்கள் செயற்படுத்தப்படவில்லை. ஆகையால் இவ்விஷயங்கள் யாவும் உடனடியாக விசாரிக்கப்பட வேண்டும். யாழ் வைத்திய அத்தியட்சகர் தட்டுத் தடுமாறி சஞ்சலப்படும் மக்களின் விதியை நிர்ணயிக்க இவ்உத்தியோகத்தை எடுத்துக் கொண்டாரென்றே நான் கருதுகின்றேன். ஆகையால் தொடர்ந்தும் இவ்வேலையைச் செய்ய இவரை அனுமதிக்கக்கூடாதென நான் கேட்டுக் கொள்கின்றேன். ——

# மீனவருக்கு வீடமைப்பு திட்டங்கள்

## பருத்தித்துறையில் நிறுவ எம். பி. கோரிக்கை

வல்வெட்டித்துறை, செவ்.

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, கற்கோவளம், முனை ஆகிய இடங்களில் வீடின்றி தவிக்கும் மீன்பிடித் தொழிலாளருக்கான வீடமைப்புத் திட்டங்கள் விரைவில் நிறுவப்பட வேண்டுமென்றும் மீன்பிடித் தொழிலுக்கு உதவியாக வல்வெட்டித்துறை, பொலிகண்டி, சக்கோட்டை, இன்பருட்டி, முனை ஆகிய இடங்களில் வான்கள் தோண்ட வேண்டும் என்றும் கோரும் மகஜரை பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் க. துரைரத்தினம் அபிவிருத்தி திட்டங்களை யாழ் அரசாங்க அதிபர் மூலம் அரசாங்கத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

பருத்தித்துறை பட்டின வீட்டுத் திட்டம், கற்கோவளம் வீட்டுத் திட்டம் ஆகியவற்றை விரைவில் நிறைவேற்றவேண்டும். குடத்தனை, கரையூர், நாகர்கோவில், ஆடாரப்பு வீதிகளைச் செப்பனிடவேண்டும்; வல்வெட்டித்துறைப் பட்டின விஸ்தரிப்புத் திட்டத்தில் விளையாட்டுத்திடல் நிறுவவேண்டும்; நாகர்கோவில்—எழுதுமட்டுவாள் தாம்போதியை உடனடியாக அமைக்கவேண்டும் என்றும் அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது.

——

# இதுவரை 3000 படங்கள்

கேப்கென்னடி, ஜூன் 7

72 மணி 21 நிமிடம் சுற்றியபின் பூமியில் வந்திறங்கிய அமெரிக்க வானவெளிப் பிரயாணிகளுக்கு ஜனாதிபதி ஜோன்ஸன், டெலிபோன் மூலம் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்தார்.

ரஷ்ய டாஸ்செய்திஸ்தாபனம் அமெரிக்க சாதனையைப் பாராட்டியுள்ளது.

இதற்கிடையில் அமெரிக்க சந்திரக்கலம் இதுவரை 3000 படங்களைப் பூமிக்கு அனுப்பியுள்ளது.

# இடமாற்றங்கள்

வல்வெட்டித்துறை, செவ்.

வல்வெட்டித்துறை சுங்க இலாகா அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. எஸ். இராமநாதன் கொழும்பிற்கும் இவரின் இடத்துக்கு எஸ். வேலாயுதமும் இம்மாதம் முதலாம் திகதி முதல் இடமாற்றம்செய்யப்பட்டுள்ளனர்.

❖

மருதங்கேணி சைவவித்தியாசாலைத் தலைமைஆசிரியர் திரு. ஆ. சுப்பிரமணியம் அல்வாய் தெற்கு சைவப் பிரகாச வித்தியாசாலைக்கு தலைமையாசிரியராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஆசிரியருக்குக் கடிதம்

# தமிழ்—இந்து சர்வகலாசாலைகள்

உத்தேசிக்கப்பட்ட சர்வகலாசாலைகள் சம்பந்தமாக தமிழ்பேசும் மக்களினதும், இந்துமக்களுடைய கருத்துக்களையும் அறியும் நோக்கத்துடன் பலர் அடங்கிய பிரதிநிதித்வம்வாய்ந்த ஒரு கூட்டத்தில் எல்லோரும் கூடி ஆலோசித்தால்— ஒரு பொது கொள்கையை அல்லது ஏற்பாட்டை ஏற்படுத்த வழி வகுப்பதாய் இருக்கும். இதனால் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய கோரிக்கைகளை நாம் சமர்ப்பிக்கவும் முடியும்.

திருவாளர்கள் எஸ் ஜே வி. செல்வநாயகம், ஜி. ஜி. பொன்னம்பலம், எஸ் எம் மாணிக்கராஜா, எஸ் எம் இராசமாணிக்கம், வணக்கத்திற்குரிய வண எமிலியானஸ்பிள்ளை, யாழ்ப்பாணம் பிஷப் டாக்டர் எஸ் குலேந்திரன், சிவஸ்ரீ எஸ் கைலாசநாதக்குருக்கள், பேராசிரியர் ஏ டபிள்யு மயில்வாகனம் (தலைவர் தமிழ்பல்கலைக் கழக இயக்கம்), சேர் அருணாசலம் மகாதேவா (தலைவர் இந்துசமய ஆலோசனைச்சபை), நீதியரசர் பி ஸ்ரீஸ்கந்தராஜா (தலைவர் இந்துசங்க சம்மேளனம்) டாக்டர் ஏச் டபிள்யூ தம்பையா, திரு ரி முத்துச்சாமிப்பிள்ளை, திரு ஏ வி குலசிங்கம், வண எஸ் தனிநாயகம், இ சுந்தரலிங்கம், கே நேசையா, எம் வயிரவப்பிள்ளை ஆகியோர் கொண்ட ஒரு தகுந்த சபையை ஏற்படுத்த ஒழுங்குகள்செய்தால் நன்மை பயக்கும். இங்கே குறிப்பிட்ட பெயர் பட்டியல் பூர்த்தியானதல்ல; ஆகையால் மேலும் பெயர்களை சேர்த்துக்கொள்ளலாம்.

பொது விஷயங்களில் கருத்து பரிமாறி ஆராய்ந்ததால் நல்ல பயனை நாம் அடையமுடியும் இந்த சூழ்நிலையில் நாம் இதனைசெய்து முடியாமல் விடுவதற்கு ஒரு காரணமுமில்லை

எஸ். சிவசுப்பிரமணியம்
கொழும்பு 12.

# தீவுப்பகுதிக்கு தரமான பஸ் சேவைகிடைக்கும்

கொழும்பு, செவ்.

ஊர்காவற்றுறை, புங்குடுதீவு ஆகிய பகுதிகளுக்கு மிக விரைவில் திருப்திகரமான பஸ்சேவை கிடைக்கவிருக்கின்றது.

இதுசம்பந்தமாக நேற்று மாலை தீவுப்பகுதி எம். பி திரு. வி. நவரத்தினம் இ. போ. ச. அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார், இப்பேச்சுவார்த்தையின் போது தீவுப்பகுதிக்குத்தரமான பஸ் சேவை தேவை என்பது பற்றி எம். பி. வற்புறுத்தியதாகவும் இதற்கு இ. போ. ச. பதில் தலைவர் மேஜர் ஒஸ்கார் டி' லிவேரா புதிய பஸ்கள் இப்பகுதிகளுக்கு அனுப்புவதாக உறுதியளித்ததாகவும் அறியப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை மலர்

'வெண்ணிற ஆடை'க்குப்பிறகு ஸ்ரீதர் கதைவசனம் எழுதி டைரக்ஷன் செய்து வெளிவரும்படம் தான் கொடிமலர்! கதையமைப்பிலும், வசன அழகிலும் டைரக்ஷன் திறமையிலும் ஸ்ரீதருக்கே உரிய தனி முத்திரைகளுடன் 'கொடி மலர்' அமைந்திருப்பதாகத் திரையுலகில் பேச்சு அடிபடுகிறது! இது பற்றி 'சினிமாப் பித்தன்' இங்கு அலசி ஆராய்கிருர்—

## 'வெண்ணிறஆடை' தோல்விக்கு 'கொடிமலர்' ஈடுகொடுக்குமா?

சமீபத்தில் ஸ்ரீதருக்கு 'வெண்ணிற ஆடை' மூலம் ஏற்பட்ட தோல்வியைச் சிலர் பிரமாதப் படுத்திக் கொண்டிருக்கின்றனர் இப்படிப் பிரமாதப்படுத்துபவர்கள் ஸ்ரீதரின் திறமையின் மீது எரிச்சல் கொண்டவர்கள் என்பதைக் கண் மூடிக்கொண்டே சொல்லி விடலாம்!

### புரட்சி டைரக்டர்

ஸ்ரீதர் திரையுலகில் நுழைந்த ஆரம்பத்திலேயே 'எதிர்பாராதது', 'அமரதீபம்', கல்யாணப்பரிசு' போன்ற படங்களின் கதை அமைப்பு, டைரக்ஷன் மூலம் 'புரட்சியாளர்' என்ற பெயரைப்பெற்ருர்! 'நெஞ்சில் ஓர் ஆலய'த்தை 21 நாட்களில தயாரித்தார் அந்தப்படம் ஸ்ரீதருக்கு ஜனுதிபதிப் பரிசைப் பெற்றுத்தந்தது! 'காதலிக்க நேரமில்லை' என்ற முழுநீள நகைச் சுவைப்படத்தைத் தயாரித்து வெற்றியும் கண்டார்! பல புதுமுகங்களைத் துணிந்து படங்களில் போட்டார்! அவர் 'வெண்ணிற ஆடை'யை எடுத்து ஏதோ தோல்வி கண்டாரென்பதற்காக இப்படிப் பிரமாதமாகப் பேசிக்கொள்ளலாமா? அந்தப்படத்தின் தோல்விக்கு ஈடுகொடுக்க அவர் கதை, வசனம் எழுதி டைரக்ட் செய்த ஒருபடம் இப்போது வந்திருக்கிறது! அதுதான்—

### 'கொடிமலர்'

கொடிகட்டிப் பறக்கப் போகிறது என்று சொன்ஞல் கூட அதில் எதுவித சந்தேகமுமில்லை; கதைப்படி கதாநாயகி ஒரு ஊமைப் பெண்! அந்தப் பாத்திரத்தில் விஜயகுமாரி நடிக்கிருர். விஜயகுமாரியோ பிரமாதமாக வசனம் பேசி உணர்ச்சிகளைக் கொட்டி நடித்துப் பெயர்பெற்ற நடிகை! அவரைப்பேசவே வாய்ப்பில்லாத ஊமைப் பெண்ணுகநடிக்கவைத்தால் ரசிகர்கள் அதை விரும்ப மாட்டார்களென்றும், கதாநாயகியே 'ஊமை'யாஞல் படம் சுவைக்காதென்றும் திரையுலக பிரமுகர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

### ஸ்ரீதர் துணிந்தார்

ஆஞல் ஸ்ரீதர் துணிந்து யார் பேச்சையும் காதில் போட்டுக்கொள்ளாமல், 'ஊமை'ப் பெண்ணையே கதாநாயகியாக வைத்து 'கொடிமலரை'த் தயாரித்தார்.

இயற்கையாகவே இந்தக் காட்சிகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன அசல்கிராமப் புறத்து மிராசுதார் வீடுகள் எப்படி இருக்குமோ அப்படியே இதில்வரும் வீட்டின் அமைப்புகள் இருக்கின்றனவாம்!

பாடல்களைவழக்கம்போல ஸ்ரீதருக்குப் பிடித்தமான பாடல்களை எழுதும் கண்ணதாசனைக்கொண்டு எழுத வைத்து வழக்கம்போல எம். எஸ். விஸ்வநாதனைக் கொண்டு இசையமைக்கப்பட்டுள்ளது. ஆறுபாடல்கள் இடம்பெற்றுள்ளனவாம்! சுவைத்து நிறைந்த பாடல்கள் இவை!

இதுதான் 'கொடிமலர்' கதை:-

### 'கொடிமலர்' கதை

எம். வி. ராஜம்மா ஒரு மிராசுதார்க் குடும்பத்தின் தலைவி! முத்துராமன், ஏ. வி. எம். ராஜன் இருவரும் ராஜம்மாவின் பிள்ளைகள். நாகேஷ் ராஜம்மாவுக்குத் தம்பி. இன்னுமொரு விவசாயக்குடும்பம் பக்கத்து ஊரில்! பீர்முகமது அக்குடும்பத்தலைவர் அவருக்கு விஜயகுமாரி, காஞ்சனு இருவரும் புதல்விகள்! அக்கா விஜயகுமாரி ஊமை. முத்துராமனுக்கு காஞ்சனுவைப் பெண் பார்க்கிருர்கள். திருமண ஏற்பாடு செய்கிருர்கள். காஞ்சனுவோ ஏ. வி. எம். ராஜனின்காதலி! திருமணத்தன்று ராஜம்மாவுக்கு உடல் நலமின்மையால் திருமண நிகழ்ச்சிக்குப் போகாமல் இருந்துவிடுகிருர். கடைசி நேரத்தில் திருமண நிலைமை மாறிவிடுகிறது. ஊமைப் பெண்ணுன விஜயகுமாரியை முத்துராமன் மணம்செய்து கொள்கிருர். ராஜம்மா இதை எதிர்க்கிருர்.

தாய்சொல்லை மீருமலும், அதே சமயம் மனைவியிடமும் அன்பு செலுத்துபவனுக முத்துராமன் திகழ்கிருர். ஒரு சமயத்தில் மனைவியையே ஊருக்கு அனுப்பிவிடவேண்டிய நிலைமை அவருக்கு வருகிறது.

அம்மாவின் வரம்பு மீறிய அதிகாரத்தால் குடும்பத்தில் அமைதி குலைவதை ராஜன் வெறுக்கிருர். அம்மாவுக்குச்சொல்லாமல் திடீரென்று ராஜன் காஞ்சனுவை திருமணம் செய்துகொண்டு ராஜம்மாவின் மனம் மாறும் வரையில்ராஜனும் காஞ்சனுவும் போராட்டம் நடாத்துகிருர்கள்! கடைசியில் குடும்பம் ஒன்று சேருகிறது!

இப்படியொரு சுவையான கதையை— பலர் ஸ்ரீதருக்கு காதல் கதையைவிட வேறு கதை எழுதத்தெரியாது என்று பேசிக்கொண்டவர்களுக்கு சவால் விடுபவர் போல— காதலுக்கு முக்கியத்துவம் கொடுக்காது அருமையாக 'கொடிமல'ரைப் படைத்திருக்கிருர்.

உறுதியாகச் சொல்லலாம் 'கொடிமலர்', 'வெண்ணிற ஆடை'யின் தோல்விக்கு ஈடுகொடுக்கும்!

இருந்து பாருங்களேன்!



ஈ. வி. சரோஜா

## எங்கே மறைந்தாரோ

அழகு முகம் காட்டி, கவர்ச்சி நடை போட்டு திரையுலகத்திற்கு வந்து பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் இதயத்திலே நீங்காத இடத்தைப் பிடித்துக் கொண்ட டைரக்டர் ராமண்ணுவின் அருமை மனைவி ஈ. வி. சரோஜா இப்போது திரையுலகத்துக்கு வராமல் ஒதுங்கி ஒதுங்கிப் போவதன் மர்மம் என்ன? மர்மம் என்னவாக இருந்தாலும் சரோஜா இப்படி ரசிகர்களை ஏமாற்றியிருக்கவே கூடாது!

'கொடுத்துவைத்தவ'ளில் எம். ஜி ஆருக்கு ஈடு கொடுத்து நடித்த அவரை அன்று திரையுலக வட்டாரம் 'கொடுத்துவைத்த'வளெனப்பாராட்டியது! அமரதீபத்தில் 'டணல்' தங்கவேலுவுடன் ஜோடி சேர்ந்து நடித்து இளவட்டங்களை இனிக்கச் செய்தார்!

அப்படி ரசிகர்களின் கனவுலகக் கன்னியான சரோஜா திடீரென்று ஒடி ஒழிந்து கொண்டுவிட்டாரென்ருல்.....

சரோ, நீ எங்கேயம்மா?

நாம் கேட்கவில்லை! உங்கள் ரசிகர்கள் உங்களை அன்புடனும், செல்லமாகவும் கேட்கிருர்கள்!

பதில் சொல்வீர்களா!

—

### புதுமுகம் பாரதியை

## நாகேஷ் 'போட்டோ' எடுத்தார்

'ஆ... அப்படியே அசையாமல் நில்லு... கொஞ்சம் சிரி... முகத்தை நேராக வைத்துக்கொள்' என்று புதுமுகம் பாரதியை போட்டோவுக்கு போஸ் கொடுக்கும் முன்பு படாதபாடு படுத்திவிட்டார் நாகேஷ்.

இந்த வெளிப்புறக்காட்சி சரவணுபிலிம்ஸ் 'சந்திரோதயம்' படத்துக்காக சென்னை கடற்கரை பக்கம் உள்ள பங்களா ஒன்றில் படமாக்கப்பட்டது.

எம். ஜி ராமச்சந்திரன், ஜெயலலிதா, அசோகன், நம்பியார் ஆகியோரும் நடிக்கும் இந்தப் படம் அண்மையில் தமிழகமெங்கும் திரையிட ... ளது. கே. சங்கர் டைரக்ட் செய்துள்ளார்.

## தேவிகாவின் துயரம்

தன் உள்ளத்தில் ஒருவன் புகுந்துவிட்டான். ஆஞல் அவனே திடீரென்று தன்னை அண்ணுக நினைத்துக் கொள் என்று சொல்லிவிட்டான். அது ஆகக்கூடிய காரியமா? எந்தப் பெண் தான் ஒப்புக்கொள்வாள்? தன் உள்ளத்தில் தேங்கிக் கிடக்கும் உணர்ச்சி அலைகளையெல்லாம் தன் தோழியிடம் கொட்டித் தீர்க்கிருள் அவள்.


அதனை கேட்ட அந்தத் தோழிதான் என்ன செய்வாள்? ஐயோ பாவம்! அவளுமல்லவா? அவனைக் காதலிக்கிருள்!

இரு பெண்களுக்கு ஒரே காதலஞ என்கிறீர்களா? ... தால் விவரங்கள் தெரிந்து விடுகின்றன.

தன் உள்ள வேதனையை தேவிகா, கே. ஆர். விஜயாவிடம் சொல்லும் காட்சியொன்று பரணி ஸ்ருடியோவில் அண்மையில் படமாக்கபபட்டது

இதில் சிவாஜிகணேசன், பி. சுந்தராம்பாள், தேவிகா, கே. ஆர். விஜயா ஆகியோர் நடிக்கின்றனர்

## வந்து விட்டீர்களா?



திருமணமான பின் நடிப்பதில்லையென்று சொன்னவர் மீண்டும் நடிக்க வந்துவிட்டாரே யென்று பத்மினியைப் பார்க்கிருரா சிவாஜி

## 'சரோ'வுக்கு அம்மாவுடன் தகராறு!

### வீட்டைவிட்டு வெளியேறினர்!!

அம்மாவுடன் தகராறு காரணமாக வீட்டைவிட்டு வெளியேறினர் சரோஜா தேவி.

### சர்க்கஸ் அழகி

சர்க்கஸ் கம்பெனி ஒன்றில் ஆண் உடை அணிந்து அசகாய சூரத்தன வேலைகள் புரியத் துணிந்துவிட்டார் சரோஜாதேவி. சரோஜா தேவி வீட்டைவிட்டு வெளியேறி வந்துவிட்ட விஷயம் ஒரு வாலிபருக்குத் தெரிந்தது. அந்த வாலிபன் சரோஜா தேவியை அழைத்து வந்து வீட்டிலேயே சேர்த்தான்.

### அம்மாவைக் கண்டாலே . . .

சரோஜாதேவியை கண்ட அம்மா, 'இப்படி வீட்டை விட்டு வெளியேறலாமா?' என்று கேட்டார். இதைக் கேட்டதும், சரோஜாதேவியின் முகம் கோபத்தால் சிவந்தது. 'உன்னை சின்னம்மா என்று சொல்லவே எனக்கு வெட்கமாக இருக்கு. உன்னைப் பார்த்தால் பிடிக்கல்லே!' என்றுகோபமாக வார்த்தைகளைப்பொழிந்து தள்ளினுர்.

'கட்' என்ருர் டைரக்டர் ராமண்ணு. இந்தக் காட்சி ஆர் ஆர் பிக்சர்சின் கலர்ப் படத்துக்காக விஜயா படப்பிடிப்பு நிலையத்தில் படமாக்கப்பட்டது.

எம் ஜி ராமச்சந்திரன் பிரதான வேடத்தில் நடிக்கும் இந்தப் படத்தின் கதை வசனத்தை சக்தி கிருஷ்ணசாமி எழுதுகிருர்.

## வாத்தியார் ஸார் வருகிருர்!

நகைச்சுவை மன்னன் 'டணல்' தங்கவேலு இம்மாதம் 9-ம், 10-ம், 11-ம் தேதிகளில் யாழ்ப்பாணத்தில் காட்சியளிக்கவிருக்கிருர். இவரை யாழ்ப்பாணத்து ரசிகர்கள் இருகரம் நீட்டி வரவேற்பார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை!

இவருடன் இவர் துணைவியார் நகைச்சுவை அரசி எம். சரோஜாவும், இனிய நடிகை இந்திராதேவியும் இங்கு வருகிருர்கள்.

## 'மார்லி'யை இனி பார்க்க முடியாதா?

முதல் 'ஸ்ரீவள்ளி'யில் முருகனுக வந்து, அடுத்த ஸ்ரீவள்ளியில் நாரதராக வந்து, கணீரென்ற குரலில் இனிமையாக பல இடங்களில் பாடி நடித்து தனக்கென்றேர் தனியிடத்தை தமிழ் சினிமா உலகில் பிடித்துக்கொண்ட டி. ஆர். மகாலிங்கம் இனித் திரையுலகிற்கு வரமாட்டாரென இப்போது பேச்சுக்கள் அடிபடுகின்றன. சொந்தப்படமெடுத்து, தோல்வி கண்டு பல லட்சத்துக்கு அதிகமான பணத்தை அழித்துவிட்டேனே என்ற மனவருத்தத்திஞலேயே அவர் தான் இனி நடிப்பதில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிருரென திரையுலக வட்டாரங்களில் பேசப்படுகிறது. இது எவ்வளவு தூரம் உண்மையோ என்று உறுதியிட்டுக் கூற முடியாவிட்டாலும், இப்போது அவரை நாம் சினிமாவில் பார்க்க முடியாதிருப்பதால், மேற்படி வதந்தி உண்மையாக இருக்குமென்றே தோன்றுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்தவீரர்கள்

## ஸோபர்ஸ், கிப்ஸுக்கு பரிசுகள்

லண்டன், ஜூன் 7

அண்மையில் நடைபெற்ற இங்கிலாந்து — மேற்கிந்திய முதலாவது கிரிக்கெட்டெஸ்டில் திறமையாக விளையாடிய ஸோபர்ஸுக்கும் கிப்ஸுக்கும் 200 ஸ்டர்லிங் பவுண் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

ஸோபர்ஸுக்கு சிறந்த துடுப்படி ஆட்டத்துக்கும் கிப்ஸுக்கு சிறந்த பந்தெறி வீச்சுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு டெஸ்ட் முடிவடைந்த பின்னரு இப்படியான பரிசுகள் வழங்கப்படும். ஐந்து கிரிக்கெட் டெஸ்டுகளிலும் கூடுதலான டெஸ்டுகளில் வெற்றி பெறும் கோஷ்டிக்கு இறுதியில் 500 ஸ்டர்லிங் பவுண் வழங்கப்படும். இன்னும் 4 கிரிக்கெட்டெஸ்டுகள் நடைபெறவிருக்கின்றன.

ஹாக்கிப் போட்டி

## 1-ம் பிரிவு: வெற்றிதோல்வியில்லை
## 2-ம் பிரிவு: கனகரத்தினம் வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

யாழ். மத்திய கல்லூரிக்கும் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்துக்குமிடையே நடைபெற்ற ஹாக்கிப் போட்டியில் 1-ம் பிரிவுக்கான போட்டி வெற்றி தோல்வியில்லாமல் 2 ம்பிரிவுக்கானபோட்டியில் கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலயமும்வெற்றியீட்டியது

முதலில் நடைபெற்ற 2 ம் பிரிவுக்கான போட்டி, ஆரம்பத்திலேயே மிகவும் விறுவிறுப்பாகக் காணப்பட்டது இடைவேளை வரைக்கும் இரு கோஷ்டியும் ஒன்றை ஒன்று விட்டுக்கொடுக்காமல் போட்டியிட்ட போதும் கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலயத்தின் முன்னணி வீரரான ஹென்றி என்னும் வீரர் மின்னல் வேகத்தில் ஒரு கோலை விளாசித்தள்ளினர். இப்போட்டியில் மத்தியகல்லூரி வீரர்கள் விட்டுக்கொடுக்காமல் போட்டியிட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்போட்டியில் கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலயம் 1—0 கோலால் மத்திய கல்லூரியைத்தோற்கடித்தது.

### முதற் பிரிவுகள்

இதையடுத்துநடைபெற்ற 1-ம் பிரிவுப் போட்டி ஆரம்பத்திலிருந்து முடிவுவரை மிகவும் ரசிப்பாகக்காணப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். இரு கோஷ்டியும் ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுக்காமல் போட்டியிட்டது. இடைவேளைவரைக்கும் இரு கோஷ்டியும் ஒரு கோலும் போடவில்லை. இடைவேளைக்குப் பின்னர் போட்டி உச்சக்கட்டத்தை அடைந்திருந்தபோதும் வெற்றிதோல்வி காணமுடியாத நிலையில் இரு பிரிவின் விளையாட்டும் அமைந்திருந்தது. இப்போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகளுக்கு திரு. பூபாலசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

கல்லூரி கிரிக்கெட் சுற்றுப்போட்டி

## 2-ம் பிரிவு: யாழ். இந்து 'பி' பிரிவு சாம்பியனனது

யாழ்ப்பாணம், புதன்

யாழ், இந்துக்கல்லூரிக்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி யூனியன் கல்லூரியை 10 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது. கல்லூரிகளுக்கிடையேயான 2ம் பிரிவுக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் பி பிரிவுச் சாம்பியனனது.

முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக்கல்லூரி சகல விக்கட்டுகளையும் இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வி. சின்னராசா 47 ஓட்டங்களும், எஸ். உதயலிங்கம் 41 ஓட்டங்களும், எம். அமலகுகன் 27 ஓட்டங்களும் பெற்றனர். இச்சந்தர்ப்பத்தில் யூனியன்கல்லூரியின் பந்தெறி வீரர்களான தனபாலசிங்கம் 26 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 3 விக்கட்டுகளையும், சத்தியநாதன் 63 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 5 விக்கட்டுகளையும் வீழ்த்தினர்கள்.

யூனியன் கல்லூரி தனது முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கட்டுகளையும் இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றது. இதில் செல்வராசா 21 ஓட்டங்களைப் பெற்ருர். இச்சந்தர்ப்பத்தில் யாழ். இந்துவின் பந்தெறி வீரர்களான ஆர். ராமநாதன் 15 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 6 விக்கட்டுகளையும், கந்தசாமி 12 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 2 விக்கட்டுகளையும் வீழ்த்தினர்கள். போதிய ஓட்டங்கள் எடுக்காத காரணத்தால் யூனியன்கல்லூரி மீண்டும் 2வது இன்னிங்ஸுக்கான துடுப்படி ஆட்டத்தை ஆரம்பித்தது. இதில் செல்வராசா 68 ஓட்டங்களையும் மகிலராஜன் 24 ஓட்டங்களையும் எடுத்தது பாராட்டுக்குரியதாகும்.

### ஸ்கோர் விபரம்

முதல் இன்னிங்ஸ்: யாழ். இந்துக்கல்லூரி: 183 ஓட்டங்கள். தெல்லிப்பளை யூனியன் கல்லூரி: 56 ஓட்டங்கள்.

இரண்டாம் இன்னிங்ஸ்: தெல்லிப்பழை யூனியன் கல்லூரி: 13[illegible] ஓட்டங்களை எடுத்தது. யாழ். இந்துக் கல்லூரி: 10 விக்கட் 3 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

## தாச்சிப்போட்டி

கோண்டாவில், புதன்

இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை இல்லங்களுக்கிடையில் நடைபெற்ற தாச்சிப் போட்டி முடிவுகள் பின்வருமாறு:

மேற்பிரிவு:- முதலாவது மயில்வாகனம் இல்லம், இரண்டாவது அப்பாக்குட்டி இல்லம், மூன்ருவது பொன்னையா இல்லம்.

கீழ்ப்பிரிவு:- முதலாவது பொன்னையாஇல்லம், இரண்டாவது மயில்வாகனம் இல்லம், மூன்ருவது அப்பாக்குட்டி இல்லம்.




## கொழும்பு

புதன் 8-6-66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை. 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 படத்திலிருந்து.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின், 7-30 கருத்தரங்கம், 8-00 முன்லிம்நிகழ்ச்சி, 9-15 புல்லாங்குழல், 9-30 பாட்டு, 10-00 நேயர்விருப்பம்.

## சென்னை

(காலை 7-15, பகல் 11-55, பகல் 2-00, மாலை 6-05, இரவு 9-00)

416.7 மீற்றர் (720 கி லை)

காலை 6-00 வந்தேமாதரம்—மங்களஇசை, 6-05 பாட்டு, 6-45 துதிப்பாடல்கள், 6-55 அருள்வாக்கு, 7-00 வாத்திய இசை, 7-15 ஒளிமிகு பாரதம், 7-30 இசையமுதம், 8-15 இசைத்தட்டு, 9-00 திரைகானம், 9-30 பாட்டு, 10-30 மதுரகீதம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 பாட்டு, 1-00 பெண்ணுலகம், 1-40 வாத்தியகோஷ்டி

மாலை 5-30 வயலின்.

இரவு 6-20 திரைகானம், 6-40 பொதுநோக்கு, 6-45 கண்ணோட்டம் — சித்திரம், 7-00 கீதாஞ்சலி 7-30 நம் விவசாயிகளுக்கு, 8-00 உன்னதவாழ்வு — நாடகம், 8-15 ரேடியோ செய்திமலர், 8-30 பாட்டு, 9-15 பேச்சு — வீரன் வழிப்படும் தெய்வம், 9-30 தமிழக நாட்டுப்பாடல்கள், 9-45 வாத்தியஇசை, 10-00 கந்தர் அனுபூதி, 10-30 திரைகானம், 11-00 பாட்டு.

## திருச்சி

(செய்திகள் காலை 7-15, பகல் 11-55, பகல் 2-00, மாலை 6-05, இரவு 7-15.)


319.1 மீற்றர் (940 கி லை)

காலை 6-30 வந்தேமாதரம்—மங்களஇசை, 6-50 மெல்லிசை. 6-55 அருள்வாக்கு, 7 00 துதிப்பாடல்கள், 7-30இசைக்கோவை—நாதஸ்வரம், 8-15 பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-50 மெல்லிசை.

மாலை 5-00 புல்லாங்குழல், 5-30 திரைப்பட இசை.

இரவு 6-20 இசைப்பயிற்சி, 6-35 ஊர்ச்சாவடி, 6-40 பொதுநோக்கு, 6-45 கண்ணோட்டம், 7-00 வீரபரம்பரை—இசைசித்திரம், 7-30நம்விவசாயிகளுக்கு, 8-00 நாடகம் — உன்னதவாழ்வு, 8-15 புல்லாங்குழல், 8-45 இசைமாலை, 9-45 இசைக்கோவை, 10-00 கந்தர் அனுபூதி.

# சுமித்தியன்

## காய்கறிப் பீடைகளை ஒழிக்கும் சர்வ கிருமி நாசினி

கிருமிகளை நாசம் செய்வதும் அதே சமயம் மனித பாவனைக்குப் பாதுகாப்பானதும் என்று முற்றிலும் நிரூபிக்கப்பட்ட கிருமி நாசினி இதோ வந்திருக்கிறது. கோஸ் கீரைவகைகள, பூசினி, புடோல் போன்ற காய் ரகங்கள், மிளகாய் மற்றும் காய்கறிகளையும், வெங்காயம், புகையிலை, உருளைக்கிழங்கு, நிலக் கடலை, சிட்ரஸ், முதலாம் எலுமிச்சை ரகங்கள், மா. அன்னுசி போன்ற பழ விருட்சங்கள், அலங்காரச் செடி கொடிகள் ஆகியவற்றையும், அரித்தும் சாரம் உறிஞ்சியும் பாதிக்கும் சகல பீடைகளையும் ஒழித்துக்கட்ட சுமித்தியன் சிபாரிசு செய்யப்படுகிறது.

சுமித்தியன் உபயோகியுங்கள்-அது பாதுகாப்பானது, செயலவன்மை வாய்ந்தது.

ஷெல் ரசாயனப் பொருட்கள் SHELL

ரசாயனப் பொருள் என்றதும் நினைவில் வருவது ஷெல.

'அல்றெக்ஸ்,' 'டீல்றெக்ஸ் 20,' 'டீல் றெக்ஸ் எக்ஸ்ட்ரா, 'என்றெக்ஸ் 20,' 'ஆர்கொடீன்,' 'பொஸ்றின்,' 'பிட்றின்,' 'மலதியன்.' ஷெல் களைப்புற்கொல்லி எம் 50, ஷெல் களைப்புற்கொல்லி ஆர் 25, 'இறமவின்,' ஷெல் பீ. எச். சி 10% இவை ஷெல் ஸ்தாபனத்தாரின் விரிவான விவசாய ரசாயனப் பொருள்களில் சில மாத்திரமே.

GRANTS 2602


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைத்த போதெல்லாம் 'லீவு' எடுக்கமுடியாது

## ஆசிரியர்களுக்கு கல்வி இலாகா அறிவிப்பு

கொழும்பு, திங்கள் ஆசிரியர்கள் எவரும் முன் அறிவிப்பின்றி சமயோசித (காஸுயல்)லீவு எடுக்கக் கூடாது என்று கல்வி வித்தியாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

பாடசாலைத் தலைமையாசிரியர்களுக்கு கல்வி வித்தியாதிபதி அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையொன்றில், சமயோசித லீவு எடுப்பதற்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர் எவரும் இனிமேல் மூன்று நாள் அறிவித்தல் கொடுக்க வேண்டுமென்று கோரியுள்ளனர். இதற்கு ஆசிரியர்கள் எவரும் லீவு எடுத்தால் அவை சம்பளமற்ற லீவாகவே கணிக்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கல்விப்பகுதியின் புள்ளி விபரப்படி, ஒரு லட்சத்து பத்தாயிரம் ஆசிரியர்களில் 25,000 ஆசிரியர்கள் தினசரி வேலைக்கு வராமலிருக்கிறார்கள்.

# தமிழரசு மகாநாட்டில் பிரதமர், ஜே.ஆர். பங்குபற்றுவர்

## அமிர்தலிங்கம் நேரில் அழைப்பை சமர்ப்பிப்பார்

கொழும்பு, செவ். தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றக் குழு நேற்றுகூடி கல்முனையில் அடுத்த மாதம் 23,24,25ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் அதன் பொது மகாநாட்டில்கலந்து கொள்ளும்படி பிரதமமந்திரியையும், ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவையும் அழைப்பதென்று முடிவு செய்தது. பிரதமரும் ஜே. ஆரும் மகாநாட்டின் கடைசித்தினத்தில் பேசுவார்கள் என்று தெரிகிறது. தமிழரசுக்கட்சியின் பொதுக்காரியதரிசி திரு. ஏ. அமிர்தலிங்கம் இந்த அழைப்பை நாளையதினம் நேரில்சென்று கொடுப்பார்.

மாவட்டசபைகள் பற்றிய தனது கருத்துக்களை குழு ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. திருச்செல்வத்திடம் தெரிவித்து.

இன்று தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழு பிரதமரையும் கல்வி மந்திரியையும் சந்தித்து போதனாமொழி பற்றியும் வடக்குக்கிழக்கைத்தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் வாழும் தமிழ் மாணவர்களின் நிலைமை பற்றியும் ஆலோசனை நடத்துவார்கள்.

அவர்கள் தமிழ்ப்பல்கலைக் கழகம்பற்றியும் பேச்சு வார்த்தைகள் நடத்துவார்கள், பேரதெனியாவிலிருந்து கொழும்புக்கு மாற்றப் பட்டுள்ள முதல் வருடத் தமிழ்ப்பட்டதாரி மாணவர்களின் நிலைமை பற்றியும் அவர்கள் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்களென்றும் தெரிகின்றது.

# மந்திரிக்கு எதிராக 'சுலோகன்' ஒட்டியோர் கைது

யாழ்ப்பாணம், செவ். தேசிய அரசாங்க மந்திரிகளில் ஒருவருக்கு எதிராக சுலோகங்களைக்கொண்ட நோட்டீஸ்களை யாழ்ப்பாணத்தில் ஒட்டியதாக நேற்று முன்தினமிரவு யாழ்ப்பாணம் பொலிஸார் எட்டுப் பேரைக்கைதுசெய்தார்கள்.

நேற்றுப்பிற்பகல் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. பி.ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் எட்டுப்பேரும் ஆஜர் செய்யப்பட்டபோது தலா 100ரூபா பிணையில் செல்ல நீதிபதி அனுமதித்தார்.

மேற்கண்ட நோட்டீஸ்களை அச்சடித்ததாக ஓர் அச்சகத்தைச்சேர்ந்த தொழிலாளர்களான கே. செல்லத்துரை, எஸ். தவராசா ஆகிய இருவரையும் யாழ்ப்பாணம் பொலிஸார், யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர் செய்தபோது, அவர்களை தலா 200ரூபாபிணையில் செல்ல அனுமதித்தார்.

எதிரிகள் சார்பில் புறக்டர் த. யோகநாதன் ஆஜரானார்.

இரு வழக்குகளையும் இம்மாதம் 27-ம் திகதிவரைநீதிபதி ஒத்திவைத்தார். ந.நி.

**நம்பிக்கை இல்லா பிரேரணை**

# எதிர்க்கட்சியினர் முன்னறிவித்தல் கொடுத்துள்ளனர்

கொழும்பு, திங்கள் ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு எதிர்க்கட்சியினர் முன்னறிவித்தல் கொடுத்துள்ளனர். மந்திரி தனக்குள்ள அதிகாரத்தையும் செல்வாக்கையும், அரசியல் நோக்குடன் பாரபட்சமாக உபயோகிப்பதாக அந்தப் பிரேரணையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

எதிர்க்கட்சியினர் முன்னறிவித்தல் கொடுத்துள்ள பிரேரணை வருமாறு:

ஸ்தலஸ்தாபனமந்திரி, உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களை பதவி நீக்குவதற்கு தனக்குள்ள அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து வருவதுடன், நிர்வாக ஊழல்கள் மலிந்துள்ளதும், ஒழுங்கற்ற முறையிலும் நடந்து கொண்ட பல உள்ளூராட்சி சபைத் தலைவர்கள் மீது அரசியல் செல்வாக்குக் காரணமாக மந்திரி நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளார். யாழ்ப்பாணம் மாநகரசபை கலைக்கப்பட்டதும், அங்கொடை கிராம சபைத் தலைவரைப் பதவி நீக்கம் செய்ததும், பல்லாயிரம் ரூபா மோசடி செய்ததாக ஆடிட்டர் ஜெனரலால் கண்டு பிடிக்கப்பட்ட எகோடபோத கிராமசபை தலைவர் மீது நடவடிக்கை எடுக்கத் தவறியதும், நல்லூர் கிராமசபை நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட [illegible] இதற்கு அத்தாட்சியாகும்'

# குறைப்பு நிச்சயம்!

## அளவில்தான் பிரச்னை

கொழும்பு, திங்கள் இலங்கையின் ரூபா மதிப்பு குறைக்கப்படுவது நிச்சயமாகிவிட்டது. ஆனால், இந்தியா குறைத்துள்ள அதே அளவு குறைப்பதா அல்லது அதைவிட அதிகமாகக் குறைப்பதா என்பதில் தான் பிரச்னை எழுந்துள்ளதாகத் தெரிகின்றது. அநேகமாக இந்திய ரூபாயின் மதிப்பின் அளவிலேயே இலங்கை ரூபாயின் மதிப்பும் குறைக்கப்படக்கூடும் என்றும் இந்தியாவைப் போல் தேயிலை ஏற்றுமதித்தீர்வையொன்றும் அமுலாக்கப்படுமென்றும் பொதுவாக எதிர்பார்க்கப்படுகின்றது.

# விண்வெளிப் பிரயாணிகள் திரும்பினர்

நியுயோர்க், ஜூன் 6 அமெரிக்கா அனுப்பிய விண்வெளிக் கப்பல் ஜெமினி-9 அட்லாண்டிக்சமுத்திரத்தில்இறங்கியது. அதில் இருந்த இரு விண்வெளிப்பிரயாணிகளும் சுகமாக திரும்பியிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

# பதுக்கலைத் தடுக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், செவ். துணிகள் பதுக்கிவைக்கப் பட்டிருப்பதாக அரசாங்க அதிபருக்கோ, பொலிஸ் சுப்ரீண்டனுக்கோ தகவல் கொடுக்கப்பட்டால் அப்பொருட்கள் வெளிக்கொண்டுவரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜவுளி விலைக்கட்டுப்பாடு சம்பந்தமாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கை காரணமாக சிலர் பதுக்கல்களில் ஈடுபடுவதாக அறியப்படுவதாலேயே இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

பதுக்கல் முயற்சிகளில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

---

# வள்ளுவர் விழா

யாழ்ப்பாணம், புதன் இராமநாதபுரம்கிளிநொச்சிச் செந்தில்ரேசக் கல்லூரியில்வள்ளுவர் விழாக்கொண்டாடப்பட்டது.

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
பேயா தினங்களில் 4 காட்சிகள்
ரங்கராவ் - பானுமதி
நடித்த
அன்னை

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி - சாவித்திரி
நடித்த
பாச மலர்

REGAL—JAFFNA
NOW SHOWING!
Charlton Heston
David Niven
in
55 Days at Peking
(Supertechnirama-color) (warfilm)

# பிரதம நீதியரசர் மீது கண்டனப்பிரேரணை

## எதிர்க்கட்சியினர் முன்னறிவித்தல்

கொழும்பு, திங்கள் பிரதமர் திரு டட்லி சேனநாயகா சமீபத்தில் அமெரிக்காவுக்குச் சென்றபொழுது அவரை விமான நிலையத்துக்குச்சென்று பிரதம நீதியரசர் வழியனுப்பிவைத்ததை கண்டிக்கும் பிரேரணை ஒன்றை ஜனப்பிரதிநிதிகள் சபையில் கொண்டுவருவதற்கு எதிர்க்கட்சியினர்முன்னறிவித்தல் கொடுத்துள்ளனர்.

வைத்திய பரிசோதனைக்காகவும் மற்றும் காரணங்களுக்காகவும் அமெரிக்காவுக்கு திரு. டட்லி சேனநாயக்கா புறப்பட்டுச் சென்ற சமயம், பிரதம நீதியரசர் திரு. டட்லிசேனநாயகா பார்லிமெண்டுக்கு டெடிகம தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்துதாக்கல்செய்யப்பட்ட மனுவை விசாரணை செய்து கொண்டிருந்தாரென்றும் இச்சமயத்தில் பிரதமரை வழியனுப்பச்சென்ற பிரதம நீதியரசரின் செயல் கண்டிக்கப்பட வேண்டியதென்றும் எதிர்க்கட்சியினரின் பிரேரணை கூறுகிறது. திருமதி சிறிமா பண்டாரநாயகா, திரு. ஆர். ஜி சேனநாயகா, டாக்டர் என்.எம்.பெரேரா டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா, திரு. பீட்டர் கெனமன், திரு. மைத்திரிபால சேனநாயக ஆகியோர் இதில் கைச்சாத்திட்டுள்ளனர்.

# 'வாழ்வு நலம் பெற யாதுசெய்யவேண்டும்'

கிளிநொச்சி, திங்கள் ''நமது வாழ்க்கை நலம் பெறச் செய்யவேண்டுமானால் நமது சமய குரவர்கள் காட்டிய வழிகளைப் பின்பற்றித்தூயகருமங்களைச்செய்ய வேண்டும். இது எம்மை மேம்படுத்திக்கொள்ளும் மார்க்கமாகும். வறுமையுற்று இருந்தாலும் தம்தம் இயல்புக்கிசைய நற்கருமங்களில் ஈடுபடுவதும் இறைவனிடம் சரணடைவதும் நமது துன்பத்தைப்போக்கும் வழியென்பதை உணர்ந்து வாழப்பழகவேண்டும்'' இவ்வாறு உருத்திரபுரம் ஜெயந்திநகரில்உள்ள மீனாட்சிஅம்மன் ஆலயத்தில் நடைபெற்ற திருஞானசம்பந்தர் குருபூசைவிழாவில் அருட்திரு வடிவேல் சுவாமிகள் பேசும்போது குறிப்பிட்டார்.

ஆலயத்தில் விசேடபூசை, கூட்டுப்பிரார்த்தனை, அன்னதானம் முதலியனவும் நடைபெற்றன.

---

# ரூபாய் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிதி அமைச்சு அதிகாரி ஒருவர் கூறினார். உண்மையில் பட்ஜட் இன்னும் சற்று மேலாகவே இருக்குமென்றும் அவர் கூறினார்

தேயிலை ஏற்றுமதி கிலோகிராமுக்கு ரூபா 2 அதிகரிக்கப்பட்டிருப்பது, தேயிலை உற்பத்தியை வெகுவாகப் பாதிக்குமெனஐக்கியதோட்டத்துரைமார் சங்க அதிகாரி ஒருவர் கூறினார்

ஏற்றுமதி கட்டணம் அதிகப்படுத்தப்பட்டிருப்பதாய் தேயிலை ஏற்றுமதி வருமானம் குறையும் எனவும், உற்பத்திச்செலவைத் தான் அது அதிகரிக்கும் என்றும் அவர் கூறினார்

**டி டி. கே. வரவேற்பு**

முன்னாள் நிதிமந்திரி திரு டி டி கே, சென்னை முதன் மந்திரி திரு பக்தவத்சலம் ஆகியோர் ரூபாய் மதிப்பு குறைக்கப்பட்டதை வரவேற்றிருக்கிறார்கள்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (அம்பாறை) ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை)
விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) மொடேர்ன் (பதுளை)
தீவொளி (நுவரேலியா)



எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நம்பியார், அசோகன், நாகேஷ்
பண்டரிபாய், சகஸ்ரநாமம்
மற்றும் பலர் நடித்த
சத்தியாமுவீஸ்
தெய்வத்தாய்

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, [illegible] இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 8ம் திகதிஅச்சிட்டுவெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org